பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 22 | வெள்ளிக்கிழமை | (04.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 168

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## ஊடகவியலாளர் நடேசனின் பூதவுடல் நேற்றுத் தீயுடன் சங்கமமானது

### இறுதி அஞ்சலி நிகழ்வில் பெருந்திரளானோர் பங்கேற்பு

(நமது நிருபர்)

**சுட்டுக் கொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும் நாட்டுப் பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் நெல்லியடியில் உள்ள ஆலங்கட்டை இந்து மயானத்தில் ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் தீயுடன் சங்கமமானது.**

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள், உறவினர்கள் எனைபலரும் கூடி அஞ்சலி செலுத்த அவரது பூதவுடலுக்கு மூத்த மகன் கிரிதரன் தீ மூட்டினார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் நெல்லியடியிலுள்ள அவரது இல்லத்திற்கு பூதவுடல் கொண்டு செல்லப்பட்டது அங்கு பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தினர்.


அங்கிருந்து நேற்றுக்கலை 10.30 மணியளவில் அவரது பூதவுடல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு அங்கு இறுதி அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தலைவர் இரா.துரைரத்தினம் தலைமையில் அஞ்சலிக கூட்டம் நடைபெற்றது.

அஞ்சலிக் கூட்டத்தின ஆரம்ப நிகழ்வாக ஈகைச் சுடரினை திருமதி.நடேசன் ஏற்றினார்.

பின்னர் பிள்ளைகள் மலர் மலை அணிவித்து அஞ்சலி செலுத்த, தொடர்ந்து அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள், விடுதலைப புலிகளின் பிரமுகர்கள்

(12ஆம் பக்கம் காக்க)



## சமாதானப் பேச்சுத் தொடர்பாக அரசுக்கு மட்டும் அழுத்தமா?

### புலிகளுக்கும் வேண்டும் என்கிறது ஜே.வி.பி.

(நமது நிருபர்)

**அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தாமதமடைகிறது என்று கூறுபவர்கள் அப்பேச்சுவார்த்தை தாமதமடைவதற்குக் காரணமாகவுள்ள புலிகளின் தன்னாட்சி அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகசபை நிபந்தனையை விலக்கிக் கொள்ளுமாறு அவர்களுக்கு அழுத்தங் கொடுக்க வேண்டு மென ஜே.வி.பி. வேண்டுகோள்விடுத்துள்ளது.**

சமாதானப் பேச்சுவார்த்தைகள தாமதமடைந்து வருவதாக அதிருப்பதி கொண்டுள்ளவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாமதமடைவதற்காக அரசாங்கத்தை மட்டும் குறை. கூறிக்கொண்டிராது சமாதானப் பேச்சுவார்தை தாமதமடைவதற்குக் காரணமாகவுள்ள விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்து அவர்களையும் கண்டிக்க முன்வர வேண்டும்.

இது சம்பந்தமாக ஜே.வி.பி விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையின் இறைமை பிரதேச ஒற்றுமை ஒருமைப்பாடு தொடர்பாக சார்வதேச சங்கம் கருசனை காட்டி வருவதை இச் சந்தர்ப்பத்தில சுட்டி காட்டுவது அவசியமானதாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள தொடர்பாக அரசாங்கத்திற்கு மட்டும் அழுத்தங் கொடுத்து வருவதானது விடுதலைப் புலிகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வழங்கப்படும் ஒத்துழைப்பென்றே கருதத் தோன்றுகின்றது என்றும் அந்த அறிக்கையில தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம)

## ஆட்சிக் கலைப்புக்குப் பிந்திய நியமனங்கள் ரத்தாகும்

### அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகிய பின்பு அரச திணைக்களங்களிலும் , கூட்டுஸ் தாபனங்களிலும் மேற்கொள்ளப்பட்ட புதிய நியமனங்கள் அனைத்தும் ரத்துச் செய்வதென அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

2001ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற் கொண்ட இத்தகையதொரு நடவடிக்கையினால் பல ஊழியர்கள் வேலையிழக்க நேரிட்டது 'ஆனால் தற்போதைய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் குறித்த காலத்தில் குறித்த திணைக்களங்களிலும் அரச கூட்டுத்தாபனங்களில் இடம் பெற்ற நியமனங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.(ம)

## கொலையாளியைக் கண்டுபிடிக்க முழுவீச்சில் நடவடிக்கைகள்

### படையினர்-புலிகள் சந்திப்பில் முடிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களுடன் சம்பந்தபட்ட குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் உடனுக்குடன்முழுவீச்சில் மேற் கொள்ளப் படவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவம், மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளுக்குமிடையில் நேற்று மாலை இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இவ் இணக்கப்பாடு ஏற்பட்டது.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டகளப்பு மாவட்ட பிரதித்தலைவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

### ஜனாதிபதியின் அழைப்பை இந்தியப் பிரதமர் ஏற்றார்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா விடுதத அழைப்பை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு நான்குநாள் உத்தியோக பூர்வ வீஜயம் மேற்கொண்டிருந்த கதிர்காமர், பிரதமர் மன் மோகன்சிங்இடம ஜனாதிபதியின் இந்த வேண்டுகோளைத் தெரிவித்திருந்தார்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய கதிர்காமர் இந்திய விஜயத்தின் பலாபலன்கள் குறித்து ஜனாதிபதிக்கு நேற்று விளக்கிக் கூறினார்.

இருதரப்பு உறவு, இலங்கை-இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் இலங்கையின் சமாதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## தன்னியக்கத் துப்பாக்கிகளுடன் வவுனியாவில் இருவர் நேற்று கைது

(வவுனியா)

வவுனியாவில் சிங்களவர்கள் இருவர் இரண்டு தன்னியக்க கைத்துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லத்தயாராகவிருந்த தனியார் பேருந்து ஒன்றில் இருந்தே இவர்கள் இருவரும் பொலிஸாரினால் துப்பாக்கியுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்கள்

இந்தத் தன்னியக்கத் துப்பாக்கிகள் [illegible]தையிலுள்ள படையினரின் காவலரணில் இருந்து திருடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே பிரஸ்தாப நபர்கள் இருவரும் கைத்துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டதாகவும்

துப்பாக்கிகள் என்ன நோக்கத்திற்காக அபகரிக்கப்பட்டன என்பது குறித்து விசாரணகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## ஜனாதிபதி சந்திரிகா அம்பாறை விஜயம்

(அம்பாறை)

ஜனாதிபதி சந்திரிகா இன்று உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அம்பாறை செல்லவுள்ளார்.

திகவாவி புனித பிரதேசத்தில் உள்ள பௌத்த விகாரையில் இடம்பெறும் சமய வைபவங்களில் கலந்து கொள்ளவுள்ள இவர்.

பின்னர் 70 லட்சம்ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள யாத்திரிகர்களுக்கான தியான மண்டபத் திறப்புவிழாவிலும் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, புத்தசாசன அமைச்சர் ரத்தினசிறி விக்கிரம நாயக்க, வீடமைப்பு நிர்மாணக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினைக்கு தீர்க்கமான தீர்வின்றி சர்வதேசம் வழங்கும் நிதி உதவியால் பயனில்லை

## உலக வங்கிக்கு தமிழ்ச்செல்வன் விளக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்ட உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் கரோல்ட், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுபபாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை கடந்த செவ்வாய் கிழமை காலை தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலக மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டார்.

இச்சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் மற்றும் புனரமைப்பு செயலகப் பொறுப்பாளர் தூயவன் சமாதானச செயலகத்தில் பணியாற்றும் செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் முடிவில் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில்,

"சர்வதேச நன்கொடையாளர்களுக்கு எங்களுடைய நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்துவது தான் இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது.

தற்போது ஆட்சியில் உள்ள புதிய அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வத்தைக் காட்டுவதை தவிர்த்து வருகின்றது. முக்கியமாக சர்வதேச சமூகத தினது நன் கொடையாளர்களது உதவிகளைப் பெறுவதில் காட்டுகின்ற கரிசனை அளவிற்கு இந்தச் சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுத்துச் செல்வதற்கான நிலைப்பாடுகளை எடுப்பதில் காட்டுவதில்லை என்ற குற்றச் சாட்டை நாங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம்.

எங்களுடைய மக்களின் ஆணையும் விருப்பமும் இடைக் கால சபை சம்பந்தபமாக விரைவில் பேசி இதற்கொரு தீர்க்கமான முடிவு எட்டப்பட்டு, இடைக் காலத்திலேனும் தங்களுடைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான்.

கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இந்தச் சமாதான முன்னெடுப்புக்களினால் எங்களுடைய மக்கள் எந்தவிதமான நன்



மையும் அடையவில்லை. இதனால் அவர்கள் நம்பிக்கையீனம் அடைந்து கொண்டு செல்கின்றார்கள் .ஆகவே மக்களுடைய விரக்தியையும் நம்பிக்கையீனத்தையும் நாங்கள் நிவர்த்தி செய்வதற்கு வகை செய்யும் விதமாக இடைக்கால நிர்வாக சபை பற்றிப பேசி ஒருதீர்க்கமான முடிவை எடுத்து அதற்கூடாக சர்வதேச உதவிகளைப் பெற்று மக்களுடைய மறுவாழ்வு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய எதிர்பார்ப்பு.

அண்மைக் கால்த்தில் இலங்கை அரசாங்கம் வடக்கு-கிழக்கிற்கான மீள் கட்டுமானம் அபிவிருத்தி புனர்வாழ்வு என்று கூறி அந்தக் கூட்டமைப்புக்களை நிறுவிவருகின்றது. அது ஒரு தலைப்பட்ச மானது இதனை ஒரு போதும் எமது மக்களோ தமிழீழ விடு தலைப் புலிகளோ ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஆகவே சர்வதேச சமூகம் நிதியுதவிகளை இலங்கைக்கு செய்கின்றபொழுது தமிழர் தாயகத்திற்கும் அது நியாயமான முறையில் பகிரப்பட்டவேண்டும் தமிழர் தாயகத்தில் வலுவான ஒரு கடடமைப்பு நிறுவப்பட்டு அந்த மக்களை சரியான முறையில நெறிப்படுத்திச் செல்லக்கூடிய தீக்கமான நிலைபபாடு இல்லாமல் சர்வதேச சமூகம் நிதியுதவிகளைச் செய்யுமாக இருந்தால் அது நிச்சயமாக தமிழ் மக்களுக்கு பலனளிக்கப் போவதில்லை என்கின்ற நிலைப் பாட்டை நாங்கள் இச் சந்திப்பில் தெளிவாக்கியுள்ளோம் எனத தெரிவித்தார்.

உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் கரோல்ட் கருத்து தெரிவிக்கையில்,

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றி பெறும் நிலையில் தொடர்ந்து உதவிகளை வழங்கவுளளோம். அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (உ--121)

சிறுவிளம்பரம்

### நாவல்கள்

செங்கைஆழியானின் புதிய நாவல்கள். போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாமபவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும் கிடுகு வேலி, யாணை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்- பிரபல புத்தகசாலைகளில் விறபனையாகின்றன. கமலம் பதிப்பகம் 75/10A, பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(8530)

# நோர்வே தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழீழ மாணவர் எழுச்சி நாள்

(ஒஸ்லோ)

தமிழீழ மாணவா் எழுச்சி நாள், நோர்வே தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர் வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ரொம்மன்வளாகத்தில் உள்ள அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நாளை ஒட்டி, நோர்வே தமிழ் இளையோர் அமைப்பு செய்திக்குறிப்பு ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

சிங்கள இனவாதத்தால் தமிழ் மக்களுக்கெதிரான கொடுமைகளும் படுகொலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு, தமிழ் மக்களின் சுதந்திர இருப்பு சிதைக்கப்பட்டது. இந்நிலையில் தான் அன்று மாணவனாகவிருந்த தியாகி பொன்.சிவகுமாரன், தமிழ் மக்களின் உாிமைகள் மீட்கப்படுவதற்கும் சுதந்திர இருப்பை உறுதிசெய்வதற்கும் ஆயுதப் போராட்டமே சாியான மார்க்கம் என்பதை உணாந்து சிங்கள இனவாதத்திற்கெதிராக ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுத்தாா.

தமிழ் மக்களின் விடியலுக்காகப் போராடிய தியாகி பொன். சிவகுமாரன் சிங்களப் படைகளால் பல தடவைகள் சிறையில் அடைக்கப்பட்டு மோசமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டாா. எதிாிகளால் சுற்றிவளைக்கப்பட்ட போது, எதிரிகளிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற உயாந்த இலட்சியத்தைத் தாங்கி சயனைட் அருந்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் போராளியாய் 1977ஆம் ஆண்டு யூன் 5 ஆம் நாள் தியாகி பொன். சிவகுமாரன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாா.

தமிழீழ மக்கள் மனங்களில் விடுதலைத் தீப்பொறியை இட்டுச்சென்ற அம்மாவீரனின் நினைவு நாளாகிய யூன் 5 ற்கு அடுத்த நாள் (யூன் 6, யூன் 5 உலகச் சுற்றாடல் தினம் என்பதால் சுற்றாடல் தினத்திற்கு மதிப்பளிக்கும் பொருட்டு) தமிழீழ மாணவா எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழீழத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

இளைய தலைமுறையினர் சமூக அக்கறையுடையவர்களாகவும் தேசத்தின் மீதும் தேசியத்தின் மீதும் பற்றுறுதியுடையவர்களாக உருவாகவேண்டும். அந்த அடிப்படையில் புலம்பெயர் தேசங்களில் கிளை பரப்பியுள்ள தமிழ் இளையோர்கள் மீது தமிழீழ தேசமானது மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

இளைய சமுதாயம் ஒன்று திரட்டப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலைமைகளும் போராட்டத்தின் நியாயப்பாடும் இளைய தலைமுறையினரால் தெளிவாகப் புாிந்து கொள்ளப் படவேண்டும்.

புலம்பெயர் தேசங்களில் வாழும் இளைய தமிழாகள் அறிவியல்-தொழில்நுட்பம் மற்றும் ஏனைய துறைசாந்து இந்நாடுகளில் தாம் பெறுகின்ற அறிவையும் நிபுணத்துவத்தையும் தமிழீழத்தின் அபிவிருத்திக்கும் கட்டுமானப் பணிகளுக்கும் வழங்கவேண்டும். இது ஒவ்வொருவாினதும் தேசியக்கடமை என்பதை ஒவ்வொரு தமிழ் இளையோரும் உணாந்து செயற்படுவது அவசியமானது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# நடேசனின் படுகொலை ஜனநாயக விரோதச்செயல்

## தென்னிலங்கையில் இருந்து கண்டனம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலையானது, கருத்துச் சுதந்திரத்திற்கும், ஜனநாயக முறைமைக்கும் விடுக்கப்பட்ட ஓர் அச்சுறுத்தல் என தென்னிலங்கையைச் சேர்ந்த கல்விமான்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான ரொகான் எதிரசிங்க ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை குறித்து ஊடகம் ஒன்றுக்குக் கருத்துக் கூறுகையில்,

நடேசனின் படுகொலையானது ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் மதிக்காத செயலாக இது காணப்படுகின்றது.

அத்துடன், நாட்டின் அரசியல் மற்றும் சமூக நிலைமை குறித்து உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பூட்டு போடுவதாகவும் அமைகின்றது எனறார்.

இதேவேளை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து கருதததுத் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டமை ஊடகச் சுதந்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாகச் செய்யப்பட்டவை என்றே கருதவேண்டியுள்ளது.

எனவே, ஊடகவியலாளர் நடேசனின் படுகொலைக்குக் காரணமானவர்களை உடனடியாக இனம்கண்டு தண்டனை வழங்கப்படவேண்டுமெனத் தெரிவித்தார்.

நடேசனின் படுகொலை வடக்கு-கிழக்கின் இயல்பு நிலைக்கு ஓர் அச்சுறுத்தல் என சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் இணைப்பாளர் சுனந்த தேசப்பிரியா தெரிவித்தார். (உ-61,10)

## நயினை ஆலய வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் சப்பற, தேர், தீர்த்த, தெற்போற்சவ உற்சவங்கள் முறையே எதிர்வரும் 30,1,2,3 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் பெயரால் ஏமாற்றுப் பேர்வழிகள் எவரிடமும் எப்பொருளையும் வழங்க வேண்டாம் எனவும் நயினா தீவு அமுதசுரபி அன்னதான சபையினர் வழமைபோல் உற்சவ காலத்தில் அன்னதானப் பணியினைச் செய்ய ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளதாகவும் ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (உ)

பாரம்பரிய கலை நிகழ்வுகளைக் கொண்ட

### மாபெரும் ஊர்வலத்திற்கான நிகழச்சி கோரல்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி எதிர்வரும் ஜுலை 16,17,18 ந் திகதிகளில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மூன்று நாட்கள் கலை விழாவுடன், நிறைவுநாளில் (18ம் திகதி) தமிழர்களின் கலைவிழுமியங்களை வெளிப்படுத்தும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளைக்கொண்ட எழுச்சி ஊர்வலம் ஒன்றையும் நடாத்த முடிவுசெய்துள்ளோம். எனவே இவ்ஊர்வலத்தில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் விரும்புகின்றோம்.

1. புராதன கிராமிய ஆட்டம்/நடனம்

✱ சுளகு கிராமிய நடனம் ✱ செம்பு கிராமிய நடனம் ✱ கொத்து கிராமிய நடனம்
✱ கூடை கிராமிய நடனம் ✱ அரிவாள் கிராமிய நடன்ம் ✱ கத்தி கிராமிய நடனம்
✱ வாள் கிராமிய நடனம் ✱ பெட்டி/கடகம் கிராமிய நடனம் ✱ மயிலாட்டம் ✱ பாம்பாட்டம்
✱ குதிரையாட்டம் ✱ வேதாள ஆட்டம் ✱ பேய் ஆட்டம் ✱ வேடராட்டம்
✱ குரங்காட்டம் ✱ மான் ஆட்டம் ✱ ஒயிலாட்டம் ✱ வசந்தன் கோலாட்டம்
✱ கோலாட்டம் ✱ கும்மி ✱ கட்டுக்கரகாட்டம் ✱ செம்புகரகாட்டம்
✱ சிலம்படி ஆட்டம் ✱ குடமுத்தல் கும்மி ✱ அம்பாநடனம் ✱ முகமூடி ஆட்டம்
✱ பொம்மலாட்டம ✱ தேவராட்டம்

2. காவடி

✱ தாளக்காவடி ✱ தவில் நாதஸ்வரத்துடனான காவடிகள் ✱ பறைமேளத்துடனான காவடிகள்

3. வாத்தியக் குழு: ✱ கீழைத்தேச வாத்திய இசைக்குழு ஊர்வலம்

✱ தவில் நாதஸ்கிர கச்சேரி ஊர்வலம் ✱ உடுக்குப்பல சேர்ந்த ஊர்வலம் (வேறுவகை பாரம்பரிய கிராமியக் கலை நிகழ்வுகளை ஊர்வலத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் அனுமதி பெற்று பங்கு கொள்ள முடியும்.)

ஊர்வலத்தில் இடம்பெறும் பத்து சிறந்த நிகழ்வுகள் தெரிவு செய்யப்பட்டு தரமான பரிசுகள் வழங்கப்படும்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் பல்கலைக்கழகம், பாடசாலைகள், கலாமன்றங்கள், கலைஞர் குழுவினர், தனிநபர் குழுக்கள் போன்ற அமைப்புக்களைப் பங்கு கொண்டு சிறப்பிக்க முன்வருமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். பங்கு கொள்பவர்களுக்கு ஏற்படும் செலவில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பங்கு கொள்ள விருப்பமானவர்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 20.06.2004க்கு முன்பு தொடர்புகொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். ஊர்வலம், நல்லூர் சட்டநாதர் கோவிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் துர்க்கா மணிமண்டபம் வரை இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

21, முதலாவது ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
077-6095070.

கலாபூஷணம் செ.மெற்றாஸ்மயில்,
செயலாளர், பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்.

(C-204)

# வெள்ளி முற்றம்

# பாதுகை

## டொமினிக் ஜீவா

**நீண்ட காலமாக மல்லிகை இலக்கிய இதழின் ஆசிரியராகப் பணியாற்றும் டொமினிக்ஜீவா ஈழத்து முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். சாகித்திய மண்டலப் பரிசினையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் எழுதிய "பாதுகை" இங்கு பிரசுரமாகிறது.**

உள்ளங்காலைத் தகித்த உஷ்ணம் உச்சம் தலையில் போய் உறைத்த போது, பதை பதைப்புடன் தட்டுத்தடுமாறி இடதுகால் பாதத்தைத் தூக்கித் திருக்கூத்தாடிய பாவத்துடன் துள்ளிக்குதித்தான். முத்து முஹம்மது.

வைரித்த கெட்டியான உதடுகளும், பிடிவாதம் தேங்கிய முகமும் அப்போதைக்கு வலிப்பு வாதை கொண்ட நோயாளியைப் போல, அவனைச் சுட்டிக்காட்டின.

"சே! காலிலை ஒரு செருப்புக் கிடைத்தால்?"திரும்பித்தார் ரோட்டைப் பார்த் தான்.

புகைத்த பின்பு குறையாக வீதியில் [illegible]சி எறியப்பட்டிருந்த சிகரெட் துண்டொன்று தரையோடு தரையாக நசுங்கிக் கிடந்தது. அவன் திரும்பிப் பார்க்கும் பொழுது நிலத்துடன் ஒட்டிக் கொண்டிருந்த அந்தக் குறளு சிகரெட் தனது கடைசிப் புகையைக கக்கிக் கொண்டிருந்தது.

உள்ளங்காலைப் பதம்பார்த்துச் சுட்ட உஷ்ணத் தகிப்பு இன்னும் முற்றாக நீங்காத நிலை... மனம் எரிந்தது.

ஒரு காலத்தில் செம்மா தெரு ஒழுங்கை என்ற பெயரால் அழைக்கப்பட்டு இன்று மாநகர சபையாரின் ஜனநாயகக் கண்களுக்குத் தவறாகத் தெரிந்த சாதிப் பெயர் அகற்றப் பட்டு, அந்த ஒழுங்கையின் மடக்கு முனையில் பெரிய பள்ளி வாசலின் பெயரைத் தாங்கி, அறிவிப்புப் பலகையுடன பிரபலப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் 'ஜும்ஆ மொ[illegible]க்லேன' வழியாக நடந்து, க[illegible]ரியார் வீதியின் முகப்பிற்கு வந்து திரும்பிக் கொணடிருந்த சமயம் தான் முத்து முஹம்மது இப்படி நடனம் ஆடிக் காலை தூக்கி நிற்கும் சம்பவம் நிகழ்ந்தது.

வடகாலோரம் துணையாக நின்ற டெலிபோன் கம்பத்தைப் பற்றிப் பிடித்த வண்ணம் வலது காலைச் சிக்காராக ஊன்றி, இடது காலை மடக்கி, மடித்து, தலை குனிந்து, பாதத்தை உற்றுப் பார்த்தான்.

சாமபல்ஒரு சத நாணய அள விற்குப் படிந்து, அப்பியிருந்தது.

வாயில் ஊறிய உமிழ்நீரைத் தொட்டு, வழித்து இரண்டு மூன்று தடவை பூசிப் பார்த்தான்.

முதற் சிகிச்சை வெற்றியளிக்க வில்லை.

உள்ளங்கால் எரிந்தது.

பக்கத்து வடிகாலிலிருந்து வயிற்றைக்குமட்டி வாந்தி வருவது போன்ற துர்நாற்றம் வீசியது.

இடது பாதத்தைத் தரையில் நன்றாக ஊன்றி, மண்ணும் எச்சிலும் ஒன்று கலக்க உள்ளங்காலை நலத்தில் அழுத்தி அழுத்தி வைத்துப் பார்த்தான். சுடுபட்ட எரிவு ஓரளவு குறைந்து சுகம் கண்டது போன்ற பிரமை.

நண்பகல் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குப் போய்த்தொழுது வட்டு வந்து கொண்டிருந்தான் முத்து முஹம்மது. மனச்சஞ்சலம் நிழலாடிய அவன் நெஞ்சில் நாளை வர[illegible]பாகும் பெருநாள் 'ஈதுல் அழ்கா' விஸ்வரூபம் எடுத்து மனதைப் போட்டு உளைய வைத்தது. தொப்பி தரித்திருக்க வேண்டிய தலையில் கைக்குட்டையை இரண்டாக மடித்துக் கட்டி இருந்தான். அக் கைக் குட்டையைக் கூட இன்னமும்அவிழ்க்க வில்லை. கைக்குட்டையின் கூர் மூலை இரண்டும் காற்றில் இலேசாகப் படபடத்தன.

நினைவுக் குமிழில் சிறு வெடிப்பு. 'இன்று வெள்ளிக் கிழமை. விடிஞ்சால் ஹஜ்ஜுப் பெருநாள்!'

சூடுபட்ட உணர்விலிருந்து முற்றாக விடுபடடு, நாளை வரப்போகும் புதுத் திருநாளைப பற்றிய மன அவசத்தைச் சற்றே மறந்து, நினைவைத் திசை திருப்பிய பார்வையை அர்த்த மற்றுத்திருப்பினான் வீதிஙயக் கடக்கலாம் என்று எண்ணி எத்தணத்தான்

ஏதாவது கார்கீர் குறுக்கே ம[illegible]கே வந்திட்டால்?

[illegible]தம் புதிய நீலநிறக் கார் ஒன்று காலோரம் ஊர்ந்து போய், ஒழுங்கை முகப்பைத் தாண்டி, சற்று அப்பால் தள்ளி நின்றது. இரண்டு நாகரிக நவயுக நாரி மணிகள காரிலிருந்து 'பொத், பொத்' தென்று தார் ரோட்டின் முதுகு நெளியும் படியாகக் குதித்தனர். பராக்குப் பார்த்தவாறே, சிரிப்புச் சிதறிய வாயைத் திறந்து தமக்குள் தாமே குசுகுசுத்தனர்.

உதட்டுச் சாயப் பகைப் புலத்தில பற்கள் பொய்ப் பற்களைப் போல மின்னின. ஒருத்தி பக்கத்திலுள்ள "ஷு பாலஸி" ற்குப் பரபர வென்று நுழைந்தாள், மற்றொருத்தி சாவகாசமாக ஆடி அசைந்து நடந்து, அக்கடையின் முதற் படிக் கட்டில் ஏறினாள்.ஏறி இரண்டாம் படிக்கட்டில் கால் வைக்கும் போது 'ஷோக் கேஸில் இருந்த நவீன காலணி ஒன்று அவளது கண்களையும் கருத்தையும் தன்பால் கவர்ந்து இழுத்துக் கொண்டது. ஆவல் ததும்பும் கண்கள் 'ஷோகே' ஸின் கண்ணாடிச் சட்டத்திற்குள் புதைந்து, அமிழ்ந்து கொண்டன.

மேற்படிக்கட்டில் ஒருகாலும் கீழே மறுகாலுமாக நின்றவாறே தேகாப பியாசம் செய்யும் பாணியில் தவளை நடை பயின்றாள் அந்த யுவதி. கண்களுக்கு விருந்தளிக்கும் உடை நாகரிகத்திலிருந்து, முடிமயிர்க் கொண்டை மோஸ்தர் வரைக்கும் உற்றுப் பார்த்துக் கடைசசரக்கின் மகிமையை ரசித்து வியந்து பார்த்துக்கொண்டே நின்ற முத்து முஹம்மதுவின் பார்வை, கீழிறங்கி "கியூடெக்ஸ்" பூசி அலங்கரிக்கப் பட்டிருந்த அவளதுமென் பாதங்களில் போய்த் தைத்தது.

அ ப பூம்பாதங்களில்




கண்கள் நிலைகுத்தி நின்றன.

அவள் காலில் அணிந்திருந்த புத்தம் புதுக் காலணியில் அவனுடைய எண்ணங்கள் எல்லாம் ஒருமுகப்பட்டுக் குவிந்தன.

மனம் விழித்துக் கொண்டது.

இதைப போலத்தானே அதுவும்?... அந்த "லேடிஸ் ஷூஸ்? மன வண்டு திரும்பத் திரும்ப அவளுடைய காலடியையே மொய்க்கின்றது.

கனவு காண்பவனைப் போன்று, ஒரு கணம் கண்களை மூடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த முத்து முஹம்மது வீதியின் ஒருவழிப் பாதை யால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்த இ.போ.ச பஸ்ஸின் கடகடத்த இரைச்சல் சப்தத்தைக் கேட்டு, சுயப் பிரக்ஞை பெற்று, வீதி ஓரத்துக்கு ஒதுங்கிக் கொண்டான்.

அந்த ஆரவாரத்தில் அந்தப்பட்டணத்துப் பரபரப்பில் அனைத்துமே அதி துரித வேகமாக இயங்கும் மும்முரத்தில் முக்கி மூழ்கி இருந்தது. நகரத்தின் இதய இரத்தக் குழாயான கஸ்தூரியார் வீதி.

தெரு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

காலணியின் நினைவு பார்வையைத் திருப்பியது, முத்து முஹம்மது மனதை மீண்டும் அலைய விட்டான்.

செருப்புக் கடையின் 'ஷோ கேஸில்' பறிகொடுத்து நின்றவள், பாதத்தை இடம் மாற்றிவைத்து மேலேறி நடந்து விட்டாள்.

பார்க்கப் போனால் காலில் அணியும் செருப்பு!

இதைபபோன்ற 'லேடி பலரினா ஷுஸி'னால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகக் காலையிலிருந்து அவன பட்டு வரும் நெஞ்சத் தவிப்பு இருக்கின்றதே,அது அவன் வாழ்க்கையில் என்றுமே அனுபவிக்காதது; என்றுமே அறிந்திராதது.

நெஞ்சக் கவலையை மேலுக்கி முத்து நெடுமூச்சாக்கி 'ஹூம்! என்று பெருமூச்சு விடுவதின் மூலம் போக்கடித்து விடலாம் என்ற தோரணையல் பெருமூச்சொன்று அவனிடமிருந்து விடைபெறுகின்றது.

ஆனால் நெஞ்சுப் பாரம் இன்னமும குறையவில்லையே!

முத்து முஹம்மது தான் தொழில் பார்கும் கடையை நோக்கித் திரும்பினான்.

நெஞ்சை அழுத்தும் நினைவின் சுமை.

எடடி முப்பது கவடு தெற்குப் பக்கமாக வைத்து நடந்தால், அவன் [illegible] விடலாம். அதைக் கடையென்று பென்னாமபெரிய பெயரில் அழைப்பதை விட, புறாக்கூடு என்றே சுருக்கமாகச் சொல்லி வைக்கலாம். வளர்ந்து வரும் கால மாற்றத்துடன் குச்சுக் கடைகளெல்லாம் கோபுர மாடங்களாக மாறி, நவயுக நாகரிகத்தை விற்பனைப் பண்டமாக வியாபாரம் செய்யும் அந்த வீதியில், இன்னமும் தனது பத்தாம் பசலி நிலையுடன் காட்சியளிக்கிறது, அந்தப் பழைய சப்பாத்துக்கடை கிழிந்து, அறுந்து, துவைந்துபோன செருப்புச் சப் பாத்துகளுக்குப் புனர்வாழ் வளித்து, தெருக்களில உலாவரக் காரண மாக விளங்கும் தொழிற் சாலை அது. இத் தனைச் கும்வாடகை முப் பது ரூபாய். அதன் ஏகபோக உரிமையாளன சாக்ஷாத் முத்து முஹ்மதுவே! அவன் திறமையான தொழிலாளி. பெரிய கடை வட்டாரத்தில் அவனுக்கு மவுஸ் அதிகம்.இளம் வயதானவனாக இருந் தாலும் தொழில் நுணுக்கங்கள் அத்தனையும் கைவரப் பெறறவன. கை உதவிக்குச் சிறுவன் ஒருவன்.

போதும்.

காலை எட்டு மணிக்கு வந்து பட்டறையில் குந்தினால் மத்தியானம் ஒரு தடவை எழும்புவான் சாப்பிட, தொழுகைக்குப் போகவென்று மற்றப்படி இருந்தது. இருந்தது தான். கடையின முன் பக்கத்துப் பட்டறையில் இருந்த வண்ணம், சுவருக்கு முதுகை முட்டுக் கொடுத்தவாறு போவோர் வருவோரினது முகங்களையும் பாதங்களையும் பாாத்து பார்த்துச் சலிப்பது தான அவனுடைய தினசரி வேலை.

இபபடித் தினமும் புதுப்புது முகங்களைப் பார்த்துப் பார்த்து தொழில் நிமித்தம் பொழுதைப் போககிக் கொண்டிருந்தபோது தான் அந்த மலாயப் பென்சன்காரர் வாடிக்கையாளராக வந்து சேர்ந்தார்.

"சிஙகபூரிலை நான் இருக்கேக்கை" என்று அவர் தனது பிரதாபததை முதன் முதலில் தானே ஆரமபித்த போதே அவர் ஒரு மலாயுப் பென்சன்காரர்! என்று அனுமானித்துக் கொண்டான் முத்து முஹம்மது.

பதினைந்து நாட்களுக்கு முன்- ஒரு மாட்டுக்கடதாசியில் ஒரு சோடி இங்கிலீஷ் பலரினாலேடி ஷுஸ களைப் பத்திரமாக மடித்து மடித்துச் சுற்றி வைத்திருந்தவர் ,வெகு கவனமாகவும் சாவதானமாகவும் கடதாசியைப் பிரித்து அந்த லேடி ஷுஸ்களைப் பட்டறைப் பலகை மீது வைத்தார்.

" இது சிங்கப்பூரிலை எடுத்தது, மோனை.... இதைப்பார், இது கின்ரைவார் ஒண்டு விட்டுப்போச்சு மற்றது ரெண்டு ஆணி வைச்சுத் தரவேணும். அவ்வளவு தான். என்ன முடிச்சுத் தாறியா?"

அவற்றைத் திருப்பியும் புரட்டியும் வார்ப்பட்டைகளை இழுத்தும் அசைத்தும் பரிசோதனைகள் நடைபெற்றன.

"ஓம் இருங்களேன் முடிச்சுத் தந்திடுறன் ஒண்டுக்குத் தோல் கொஞ்சம வைச்சுத் தைக்கவேணும் மற்ற தின்ரைக்கு குறிக்கு ஆணி அடிச்சு இறுக்கவேணும் இந்தா செஞ்சி தந்திடுவன் ரூபா ஒண்ணு குடுத்திடுங்கோ"

"ஏதோ நீதியாக் கேள் எழுவத்தைஞ்சு சதம் தந்திடுறன் ஆனா, வேலை திறமாய் இருக்கட்டும் என்ன விளங்குதோ?"

பேரம் முடிவடைகின்றது.

"சாி இப்படிக் குந்துங்களேன் ஒரு நிமிட்டிலை தந்திடுகிறேன்? ஒரு நிமிட்டிலை!"

"எனக்கு இருக்க நேரமெங்கே கிடக்கு? உதாலை சுத்திக் கொண்டு வாறன் கெதியாய்ப் பாத்து முடிச்சு வையன்"

'சரி; ஜல்தியா சட்டென்று வந்திடுங்க முடிச்சு வைக்கிறன்"

போனவர் வரவில்லை அன்று திரும்பவில்லை அதற்கு அடுத்த நாளும வரவில்லை அதற்கு அடுத்த நாள் விட்டு அடுத்த நாள் கூட... ஊஹூம்! திரும்பவேயில்லை! பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. மனதில் ஒரு நப்பாசை.

இனி அந்த அறாம் புடிச்ச மனுசன வரமாட்டான் போலை இருக்கு. அது கிடந்து இனி ஆருக்கு என்ன லாபம் என்று நெஞ்சில் நினைவு அலைகள சுழியிட்டன. இரண்டு நாட்களுக்கு முன்னர் அவன் துணிந்து விட்டான். நாளை ஒருநாள் போனால் ஹஜ் பெருநாள் அப்புறம நாட்கள் கடந்து போனால அவனிடம் வக்கென்ன இருக்கிறது?

"அதைப் புதிசாக்கி ரகீலாவுக்கே பெருநாள் பரிசாகக் குடுத்து விட்டால்...?"

ரகீலாவின் பெயரை வாய் உச்சரிக்கும் பொழுதே நெஞ்சம் இனித்தது.!

கடந்த மௌலத் மாதமே அவர்கள் இருவருக்கும் நிக்காஹ் நடந்தேறியது. எண்ணி ஒரு வருடம் கூட ஆகவில்லை. அதற்குள் ஹஜ் பெருநாள் எதைக் குடும்போம்? என்னத்தைப் பரிசாக அளிப்போம்? என்று மனம் துடிதுடித்த வேளையில் தான் பென்சன்காரரின் நினைவு அவன மனதில் குதிர்விட்டது. அவர் தந்து விட்டு எடுக்காமல் இருக்கும பலரினாலேடி ஷுஸ் ஞாபகத்தில் தட்டுப் பட்டது.

ரகீலா அப்படியென்றும் அவாக் கொண்ட பெண் அல்லத்தான்.

..."ஆனா, ஒழுங்கையிலை என்ட மதிப்பு? நாளைக்கி நம்ப பீபீயை இந்த ஒழுங்கைப் பெண்டுகள் மதிக்காடடி போனா அவ என்னை மதிப்பாளா?"

ஹஜ் பெருநாளன்று அந்த வட்டத்துப் பெண்களெல்லாம் தொழுகைக்குப் போவார்கள்.ஒழுங்கைத் திருப்பத்திலுள்ள பெரிய வீடு தான் பெண்கள்தொழுகை இடம்.ஒழுங்கை பூராவிலுமுள்ள அத்தனை முஸ்லிம் பெண்களும் அங்கு ஒன்று கூடுவார்கள்.

அந்த இடத்திலை, அவுங்களுக்கு மத்தியிலை நம்ம பீபிமதிப்பாய் இல்லையெண்டால், நாளைக்கு நம்மளை இவங்கள் மதிப்பாகளா, என்ன?"

நபபாசை செயலகப் பரிணமிக்கின்றது இரவோடு இரவாய்க் கண் விழித்து, அந்தப் பலரினா லேடி ஷுஸ்களை நகாசு பண்ணித் தனது கைவண்ணத்தைக் காட்டிப் புதிது போலச் சிருஷ்டித்து விட்டான்.

அடேயப்பா! இப்போது அதன் மவுசுதான் என்ன!

தனது பீபிக்கு அன்புப் பரிசாக பலரினாலேடி ஸுஸ்களைப் பெருநாளன்று கொடுத்துவிட்ட மனப் பூரிப்பில் அவன் திளைத்துக் களித்தது நேற்று.

அந்த நினைவில்தான் எத்துணை இனிமை!

அவனுடைய அகத்தில் குமிழிய பெருமித அலைகள் முகத்தில் இழைந்தன. இடையிடையே பைத்தியம் போன்று சிரித்துக்கொண்டான். நெஞ்சில் கவிந்திருந்த ரகீலா வின் சிரித்த முகம் அவனைப் பூரிப்பில் ஆழ்த்தியது. உலகத்து இன்பங்கள் எல்லாமே தன் காலடியில் என்று இறுமாந்து நே[illegible] நடை பயின்று உலாத்தி வந்ததும் இதே வீதியில் தான். ஆனால் இன்று?

இனறு காலையில் சொல்லி வைத்தது போல,கடையைத்தேடி வந்து விட்டார் அந்தப் பென்சன்காரர் "என்ன ,நான் தந்திட்டுப்போன செருப்புத் தைச்சாச்சா?" கடைப்பையன் தான் கடையில் இருந்தான்.

அப்பொழுது முத்து முஹம்மது பட்டறையில் இல்லை. முன்னால் உள்ள தேநீர்க் கடையில் தேநீர் குடிக்கச் சென்றான். தேநீ அருந்தி விட்டு பீடியைப் பற்றவைத்துக் கொண்டு கடையின் கதவுடன் சாய்ந்துகொண்டே புகையை ஊதி ஊதி வாயாலும் மூக்காலும் வழியவிட்டுக்கொண்டிருந்தான்.

அவருடைய தலைக்கறுப்பைத் தனது கடைக்கு முன்னால் கண்டதும தேநீக் கடையின் பின்வாசல வழியாகப் பாய்ந்து சென்று மறைந்து தப்பித்துக்கொண்டான் முத்து முஹம்மது.

அதற்காக முழுநாளுமே கடைக்கு வராமல் இருந்து விட முடியுமா?

அதுவும் நாளைக்கு ஹஜ் பெருநாள் வேலையோ மலைபோல்இருகத நாலு காசு உழைச் சால் தானே நாளைககுப் பெருநாள் கொணடாட்டம்? கடையை நோக்கி நடந்து கொண்டிருந்தவன் மனத்தில் இப்படியான பிரச்சினைக்குரிய சர்ச்சைகள் நடந்து கொண்டிருந்தன.

அந்தச் சவத்தை வாங்கி அந்த மனுசன்ரை முகத்திலை வீசி எறிஞ்சிட்டால்?

நிக்காஹ் செய்து முதல்லை குடுத்த பரிசு அதிலையும் நாளைக்குப் பெருநாள் நாத்து அதைக் காலிலை போட்டுக் கொண்டு தொழுவப் போகும் வீட்டுக்குப் போகாட்டி நம்மளுககுத் தான் நல்லா இருக்குமா?...

....' இண்டைக்குப் போகட்டும் நாளைக்குப பெருநாள் கடை பூட்டிடுவம்,நாளைக்கு மக்க நாள் திருப்பிக் குடுத்திடுவம்"...மனத்துடன் தர்க்கவாதம் புரிந்து பார்த்தான் சஞ்சல உணர்சி செத்து மடிந்தது தான். கடடிய வலைக்குள் தானே விழுந்து தவிக்கும் சிலந்திப் பூச்சியைப்போல தனது சிந்தனை வலைக்குள் சிக்குப் பட்டுத் தவிதவித்த தன்னையே தேற்றிக்கொண்டான்

கடைப்படியில் ஏறிப்பட்டறையில் அமர்ந்ததே நினைவில் இல்லை.

பையன் ஒரு சோடிச் சப்பாத்துக் களையும் இரண்டு சிறுவர்களின் செருப்பையும் முன்னால வைத்தான். "இதுகளை ஒருகால் சட்டைக் காரத்துரை தந்திட்டுப் போனார் செய்து வைக்கட்டாம். சப்பாத்து ரெண்டுக்கும் நல்லாக் குதி அடிச்சு வைக்கட்டாம் இப்பவருவாராம்"

'சாி சரி' நீ ஊட்டுக்குப் போய் சோறு தின்னுட்டுவா!..."

மனதின் குரங்காட்டத்தை அடக்க இதயத்தின் எழுச்சியை இறக்க தொழிலில் மனத்தை இலயிக்க விட்டான். கை பரபரவென்று பழக்கப்பட்ட வேலையை இயந்திர கதியில் செய்கின்றது மனம் காட்டில் மேயும் மான்குட்டியைப் போல அலைந்து திரிகின்றது. அது சுற்றிச் சுற்றி...

ஒரு பூட்சிற்குக் கீல் அடித்தாயிற்று அடுத்ததை எடுத்துக் குறட்டினால் ஆணிகளைக் கழற்றினான். படக்கென்று குறடு விடுபட்டு முழங்கை சுவரில் மோதியது. இலேசான வலி முகத்தில வே[illegible]யைச் சரம் கோத்து நிற்க தலைமயிர் ஒழுங்கு கெடடு முன்னால் கவிந்து கண் களை மறைக்க .... பூட்சை வைத்து விட்டு நெற்றியில் விழுந்த மயிர்க் கற்றைகளைக் கையால் கோதி மேலேற்றித் தலையில் படிய அழுத்தி விட்டுக் கொண்டே உடுத்தியிருந்த சாரத்தின் கழ்த்தலைப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான். தொடர்ந்து வேலை நடக்கிறது. பூட்ஸ் இரண்டிற்கும் பாலீஸ் பண்ணி, வேலையைத் துப்புரவாக முடித்ததாகி விட்டது. அடுத்தது குழந்தைகளின் செருப்புகள்.

(மிகுதி நாளை தொடரும்)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 3

## மதுரை திருப்புகழ் ஸ்வாமி

ஒரு சமயம் மதுரை திருப்புகழ் ஸ்வாமிகள் திருவண்ணாமலைக்குக் கார்த்திகைப் பெரு விழாவில் திருப்புகழ் கோஷ்டி செய்ய எழுந்தருளினார். அவரைக் காங்கேயநல்லூருக்கு அழைத்து வந்து வந்தனை வழிபாடுகள் செய்தனர். ஆர்க்காட் டருகில் என் தமக்கையாரும் அவர் கணவரும் தங்கள் ஊரா கிய திமிரிக்கு அழைத்துச் சென்று விரிவுரை செய்வித்தார் கள். மறுநாள் காலை ஸ்வாமிக்கு பாதபூஜை செய்து பழங் கள் நிறைந்த தட்டில் 50 ரூபா வைத்து பாதகாணிக்கையாகத் தந்தார்கள். ஸ்வாமிகள் சிறுகோபத்துடன் பின்புறமாக நின்று கொண்டிருந்த என் தந்தையாரைநோக்கி "எனக்கு ஏன் பணம்?" என்று கேட்டு முறைத்துப்பார்த்தார். அப்பொழுது சிறுவனாகிய நானும் அருகில் நின்றுகொண்டிருந்தேன்.



என் தந்தையார் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகிக் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் ஸ்வாமிகள் கோபம் தணிந்து சாந்தமாக "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். என் தந்தையார் "என்னுடைய கமலாக்ஷி என்ற இரண்டாவது புதல்வியை தருமலிங்கம் என்ற இவருக்கு மூன்றாம்தாரமாக திருமணம் செய்து கொடுத்தேன். திருமணமாகி 17 ஆண்டுகள் ஆகின்றன. இவர்கள் காசி , இராமேஸ்வரம் போய் வந்தார்கள். மாதந் தோறும் செவ்வாய்க்கிழமையன்று திருவண்ணாமலை சென்று மலை வலம் வந்து வழிபாடு செய்கிறார்கள். புத்திரபாக்கியம் அமையவில்லை. அதுதான் எனக்குப் பெரும் கவலை என்று கூறினார்.

உடனே ஸ்வாமிகள் ஆவேசம் வந்தவரைப் போல் தட்டில் இருந்த வாழைப் பழங்களில் இரண்டை எடுத்து என் தமக்கையார் கையில்கொடுத்து "அம்மா! ஒரு பழத்தை நீயும், மற்றொரு பழத்தை உன் கணவரும் சாப்பிடுங்கள். இந்த மாதம்விலக்கம் வரும். அடுத்த மாதம் உன் மணிவயிறு வாய்க்கும். ஆண் குழந்தை பிறக்கும். அடுத்த கார்த்திகை விழாவிற்கு நான் திருவண்ணாமலைக்கு வரும்போது நீ குழந்தையுடன் வருக" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார். இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது கார்த்திகை மாதம். ஸ்வாமிகள் புனிதவாக்கின்படி என் தமக்கையார் மார்கழி மாதம் கருவுற்று புரட்டாசி மாதம் ஆண் குழந்தையைப் பெற்றார். கார்த்திகை மாதத்தில் திருவண்ணாமலைக்குப் போய் தாங்கள் கட்டியுள்ள சத்திரத்தில் ஸ்வாமிகளை அழைத்து பாதபூஜை செய்து குழந்தையை ஸ்வாமியின் திருவடியில் இட்டார்கள். ஸ்வாமிகள் ஆசிகூறி "அம்மா! இவனுக்கு தம்பியும் பிறப்பான்" என்று ஆசி கூறினார்.

இராஜகோபுரத் திருப்பணியை நிறைவேற்ற வேண்டும் என எண்ணிய என் தந்தையார் பங்குனி மாதம் என்னை அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சென்று திருப்புகழ் ஸ்வாமி களை வணங்கி "ஸ்வாமி! அடியேன் மிகவும் ஏழை; பெரிய குடும்பஸ்தன். முருகன் கோயில் இராஜகோபுரத் திருப்பணி தொடங்கி பொருளின்றி தடைப்பட்டு நிற்கின்றது. செட்டிநாட்டில் சென்று விரிவுரை செய்து திருப்பணி செய்யக் கருதுகின்றேன். தங்களுக்குத் தெரிந்த நகர தனவணிகர்களுக்குப் பரிந்துரைக் கடிதம் தருக என்று கேட்டார்.

ஸ்வாமிகள் புன்முறுவல் பூத்து "ஒரு ரூபா மூலதானமாக வைத்துக்கொண்டு திருப் பணியைத் தொடங்கு. உன் ஊருக்கு அருகில் இருந்தே அதற்குரிய பணம் வந்துசேரும். இராஜகோபுர திருப்பணி ஆறு மாதத்தில் முற்றுப்பெறும். திருப்பணி நடக்கும்பொழுது ஒரு உயிர்ச்சேதம் வரும். அப்பொழுது இந்தத் திருநீற்றை எடுத்து இடுக" என்று கூறி ஒரு திருநீற்றுப் பையை அளித்தார்.

என் தந்தையாருக்கு குருநாதன் வாக்கு என்றால் வேதவாக்கு என்ற நம்பிக்கை உண்டு. என்னை அழைத்துக்கொண்டு ஊருக்கு திரும்பிச் சென்றார். சித்திரை மாதம் 14-ம் திகதி கால்கோள் விழா செய்தார். 40 நாளில் கோபுரம் கட்டிட வேலை முடிவு பெற்றது. ஐப்பசி மாதம் பூசு வேலை செய்யும்போது கோபுரத்தின் உச்சியில் இருந்து என் தம்பி ஸ்ரீசைலவாஸன் நழுவி விழுந்து விட்டான். அதைக் கண்டு ஊரே கலங்கி அழுதது. என் தந்தையார் முருகா முருகா என்று கதறி ஸ்வாமிகள் கொடுத்த திருநீற்றை எடுத்து சடக்கர மந்திரம் சொல்லிப் பூசினார். என் தம்பி மூர்ச்சை தெளிந்து சுகமுற்றான். பின்னர் மூன்று மாதத்தில் இராஜகோபுரத் திருப்பணி முற்றியது. 1933இல் மதுரை ஸ்வாமிகளை அழைத்து அவருடைய சீரிய தலைமையில் மகா கும்பாபிஷேகம் செய்வித்தார். முருகன் கோயிலில் நூதனமாக அருணகிரிநாதர் திருவுருவத்தை பிரதிஷ்டை செய்தார்.

## தாயார்

என்னை ஈன்ற அன்னையார் மிகுந்த தர்மகுணம் படைத்தவர். அவருடைய திருநாமம் கனகவல்லி அம்மையார். பெயருக்கு ஏற்றபடி தங்கம் போன்ற உள்ளம் படைத்தவர். கற்பென்னும் வெற்பில் நின்று இல்லறமாகிய நல்லறத்தை நாளும் இனிமையுடன் நடத் தினார். பசி என்று வந்தவருக்கு அள்ளிக்கொடுக்கும் உள்ளன்பு உடையவர். என்னுடைய தாயார் யாரிடத்திலும் கோபமாகப் பேசி நான் பார்த்ததேயில்லை. பொறுமையின் பொக்கிஷம். வீட்டு வேலைகள் அனைத்தையும் தாம் ஒருவரே செய்து விருந்தோம்பி திருந் திய வாழ்வு வாழ்ந்தனர். போதுமான கல்வி ஞானம் பெற்றிருந்தார். நான் இளமையில் பலப்பல நுண்ணிய கருத்துக்களை எனது தாயாரிடம் தெரிந்து கொண்டேன்.

ஒருநாள் நான் சின்னஞ்சிறுவனாக இருந்த பொழுது உடையை மடக்கிக்கொண்டு அமர்ந்தேன். என் தாயார் என்னைப் பார்த்து "நிலம் அழுக்காக இருப்பதனால் உடையை மடக்கிக்கொண்டு உட்காருகின்றாய். சிறு குழந்தையாகிய நீ அழுக்குத்தரையில் அமரக் கூசுகின்றாய். உள்ளத்திலே ஆசாபாசங்களான அழுக்குகள் இருந்தால் அந்த அழுக்குப்படிந்த உள்ளத்திலே இறைவன் இருக்கக் கூசுவான். ஆகவே நீ உள்ளம் தூயவனாக இருக்கவேண்டும்" என்று கூறினார். சின்னஞ்சிறு பருவத்திலே என் அன்னை கூறிய அந்த நன்னலம் மிகுந்த சொன்னலம் பசுமரத்து ஆணிபோல் பதிந்தும் கிடக் கின்றன.

(தொடரும்)

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

மாசடைந்த கடல் உணவுகளை உட்கொள் வதால் உண்டாகும் ஈரலழற்சி நோயின் வரு டாந்த பொருளாதார தாக்கம் மட்டும் 7.2 பில்லி யன் டொலர்கள் ஆகும்.

## இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அறிகுறிகள் உள்ளன

### ஐ.நா. உணவு, விவசாய ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

தீவிர உணவுப் பற்றாக்குறை நிலவும் நாடுகளில் இலங்கை யும் ஒன்று என ஐக்கிய நாடு கள் சபையின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தெரி வித்துள்ளது.

இதுகுறித்து மேற்படி ஸ்தா பனம் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டிருப்பதாவது,

இனப்பிரச்சினையின் மோச மான விளைவுகளும், கால நிலையின் தாக்கமுமே இலங் கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக் காரணமாக அமைந் துள்ளது.

இனப்பிரச்சினையால் உரு வாகிய கொடிய யுத்தம் இலட் சக்கணக்கான மக்களைப் பாதித்ததுடன் உணவுப்பற்றாக் குறையையும் ஏற்படுத்தியிருக் கின்றது.

இதேவேளை, இவ்வாண்டில் வரட்சி நிலவிவருகின்றதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வரட்சி நிலை தொடர்ந்தும் இருக் குமாயின் இவ்வாண்டில் பெரும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (உ-60,10)

## கடற்றொழில் நீரியல் வள அமைச்சு முறைகேடுகள் ஆராய்வு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் கடற்றொழில் நீரியல்வள அமைச்சில் நிகழ்ந் ததாகக் கூறப்படும் முறைகேடு கள் பற்றி ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கடற் றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரி வித்துள்ளார்.

அமைச்சின் அலுவலங்க ளில் கடமையாற்றிய அதிகாரி கள் அமைச்சின் நிதியை துஷ் பிரயோகம் செய்திருந்த தாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத் திருப்பதாகவும், இதனால் இது குறித்த விசாரணைகளை உடன் ஆரம்பிக்கப் போவதாக வும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (உ-60,10)

## விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் நீர்வேலிச் சந்தியில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி-மோட்டார் சைக்கிள் விபத் தில் நீர்வேலி மேற்கைச் சேர்ந்த ரி.சுரேஸ்குமார் (வயது-18), ஆர்.கந்தசாமி (வயது-55) ஆகி யோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கபட்டுள்ளனர். (உ-19)

மீண்டும் உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

விடயம்
தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்

பலப்படுகின்றது

பலவீனப்படுகின்றது

உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்

KID'S OF ENGLISH

(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.

பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.

Kid's of English

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒரு சமயம் பெர்னாட்ஷாவைப் பார்த்து, "உலகம் ஏன் உங்களைச் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?" என்று கேட்டார்களாம்.

அதறகு அவா் ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பது கிடையாது... நான் வாரத்தில் ஒருதடவை, இரண்டு தடவை சிந்திக் கின்றேன். அதனால் தான் உலகம் என்னைச் சிந்த னையாளன் என்று பாராட்டு கிறது!" என்று சொன்னாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகமாகச் சிந்திப்பதில்லை என்று தெரிகிறது!

மனம் சுத்தமாக இருக்க வேண்டும் அப்போதுதான் சிந்த னையும் தெளிவாக இருக்கும்.

மனம் எந்த அளவுக்கு சுத்தமாக இருக்கவேண்டும் தெரியுமா?

அதற்கு மார்க்ஸ் அரேலியஸ் என்ற அறிஞர் ஓர் அளவுகோல் கொடுத்திருக்கிறார்.

"திடீரென்று உங்கள் முன்னால் ஒருவர் வந்து நின்று, 'நீங்கள் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக் கிறீர்கள்... அப்படியே சொல்லுங்கள்! என்று கேட்டால், உடனே தயங்கா மல் உள்ளது உள்ளபடியே...

'இதைத்தான் இப்போது நான் நினைத்துக் கொண்டி ருக்கிறேன்' என்று சுலபமாகச் சொல்லக் கூடிய அளவுக்கு மனம் இருக்கவேண்டும்.அதுதான் சுத்தமான மனம் என்கி றார் அவர்.

அப்படிச் சொல்லக்கூடிய நிலைமையிலேயா நாமெல் லாம் இப்போது இருக்கிறோம்?

"வெளிப்படையாகப் பேசுங்கசார்!"என்று கேட்டால்.... "அது எப்படி சார்...?மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக்கொள்ள முடிகிறதா?"என்று தானே கேட்கிறோம்!

பறகு எப்படி மனம் சுத்தமாக இருக்கும்? சுத்தமாக ஆகும்?

நம்மில் பலர் மனதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்று தான் நினைக்கிறோம். ஆனால் அது முடிவதில்லை...மிகவும் கஷ்டமாக இருக் கிறது. சும்மாவா சொன்னார்கள்...? 'மனம் ஒரு குரங்கு மாதிரி' என்று? அது சரி...

மனதிற்கும் குரங்குக்கும் அப்படி என்ன ஒரு சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக் கொண்டிருக்கிறது! இதுதான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை.

என்னுடைய நண்பர் ஒருவர்... இதற்கு இன்னொரு விளககம் கொடுத்தார். "மனம்-குரங்கு இந்த இரண்டையுமே எப்போதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும்... 'இல்லா விட்டால் நமக்குத்தான் கஷ்டம்" என்றார்.

"எப்படி?" என்று கேட்டேன்.அதற்கு அவர் சொன்ன கதை தான் இது. ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய அரண்மனையில் ஒரு குரங்குக் குட்டியை வளர்த்து வந்தார்.

அந்தக குரங்கு ஒரு சுவர்ஓரமாக ரொம்ப சாதுவா உட்கார்ந் திருக்கும். அப்படி இருந்தாலும் கூட அந்த ராஜா தினமும் ஒரு குச்சியால் அதற்கு இரண்டு அடி கொடுப்பார். அந்த அடியை வாங்கிக் கொண்டு... குரங்குக்குட்டி அங்கே கிடைக்கும் ஆகாரத் தையும் சாப்பிட்டுக் கொண்டு சாதுவாக காலம் தள்ளிக் கொண் டிருந்தது.

அந்த ராஜாவுக்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந் தார். அவர் தினமும் ராஜா கூடவே இருப்பார்... போவார்... வருவார்.

ராஜா அந்தக் குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார்.அது அவர் மனதுக்கு மிகவும் சங்கடமாக இருந் தது.

ஆதலால் அவர்,"அரசே... என்னங்க இது அநியாயம்... வாயில்லா ஜீவன்... அதுவுமில்லாமல் அது ரொம்ப சாதுவாக ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறது... அதைப் போய் தினமும் அடிக்கிறீர்களே!" என்று கேட்டார்.ராஜா பார்த்தார்.

"சரி அமைச்சரே! உங்கள் வார்த்தைக்கு நான் மரியா தை கொடுக்கிறேன்.இன்றையிலிருந்து இந்தக் குரங்கை அடிப்பதை விட்டுவிடுகிறேன்.இதோ குச்சியைக் கீழே போட்டு விடுகிறேன்" என்றார்.குச்சியைக் கீழே போட்டும் விட்டார்.

அதன் பிறகு தினமும் சாயந்தரம் ராஜாவும் மந்திரியும் அந்தப் பக்கமாக வருவார்கள்...போவார்கள்.

ராஜா அடிக்கவில்லை என்று தெரிந்ததும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளை யாட ஆரம்பித்தது. அப்புறம் ராஜா கிட்டே ஓடி வந்து கொஞ்ச ஆரம்பித்தது! அதற்கு அடுத்த நாள் என்ன செய்தது தெரியுமா? ராஜா தோளில் ஏறி உட் கார்ந்து... அந்தக் குச்சியால் ராஜாவின் காதில் குத்த ஆரம்பித்தது!பார்த்தார் மந்திரி...

"என்ன இது?ராஜா என்ற மரியாதை இல்லாமல்..."என்று சொல்லி அந்தக்குச்சியைப் பிடுங்கிக் குரங்கை அடிக்க ஆரம்பித்து விட்டார்.

இப்போது ராஜா அந்த மந்திரியைப் பார்த்து."இதே வேலை யைத்தானே நான் ஆரம்பத்திலேயே செய்து கொண்டி ருந்தேன்!" என்று கேட்டார்.

இப்போது தான் மந்திரிக்கு...'குரங்கும் மனமும் அடக்கி வைத்திருக்கும் வரையில் தான் அடங்கியிருக்கும்' என்ற உண்மை புரிந்தது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானப் பேச்சில் அரசு அசமந்தம் எதிர் நடவடிக்கைகளை எடுக்க நேரிடும்

## சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

சமாதானச் சூழ்நிலையின் கீழ் தமது கைகள் கட்டப் பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித் துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திர சேகரனை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் சந்தித்துப் பேசிய பின்னர் கருத்து தெரிவிக்கை யிலேயே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் ஊடகவியலாளர் நடேசன் கொல்லப்பட்ட சம்பவமானது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். யுத்த சூழ்நிலை தற்போது நிலவி வருமானால் தமிழீழ விடுதலைப்புலிகள் இதற்குத் தகுந்த பதிலை வழங்கியிருப்பார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாகக் காட்டி வரும் அசமந்தம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளை பலவீனப்படுத் தும் அரசின் நடவடிக்கைகள் என்பவற்றைத் தொடர்ந் தும் அனுமதிக்க முடியாது.

இந்நிலை தொடருமானால் நாம் எதிர் நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் எனத் தமிழ்ச்செல்வன் எச்சரித்தார்.

இதேவேளை, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற சந்திப்பின் போது இருதரப்பின ருக்குமிடையில் கருத்துக்கள்பரிமாறிக கொள்ளப்பட்டன.



இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின பாராளுமன்ற உறுப்பினர்களுடன சந்தித்துக் கலந் துரையாடும் போது மாகாணசபைத்தே தல்கள் குறித்தும் கூட்டமைப்பு எம்பிக கள் மலையகத்தில் தேர்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ளவது தொடர்பாகவும் தமது முடிவை அறிவிப் பதாகவும் தமிழ்ச்செல்வன் மலையக மக்கள் முன்ன ணியின் தலைவர் சந்திர சேகரனுக்குஉறுதியளித்தார்.

(த-121)

# ஜனாதிபதி- ஜே.வி.பி. சந்திப்பில் சிக்கல்களுக்கு இணக்கமான தீர்வு

## இ.தொ.காவுக்கும் அமைச்சரவையில் இரு இடங்கள்

(கொழும்பு)

அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண் ணிக்கையை அதிகரித்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஜே.வி.பியினரும் 5 மணிநேரப் பேச்சுக்களை நடாத்தி உடன்பாட்டை எட்டியுள்ளனர். அததுடன சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடயங்களிலும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக சம்பந்தப பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங் கத்துடன் இணையும் என எதிர்பார்க்கப்படும் இவ் வேளையில் அவர்களுக்கும் அமைச்சரவையில் இரு இடங்களை ஒதுக்கும் வகையில் அமைச்சர்களின் எண் ணக்கையை அதிகரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள் ளது.

இதைவிட வேறொரு முக்கியமான அபிவிருத்தித் திட்டத்தில் உயர் அதிகாரமுள்ள கூட்டு ஆணைக் குழு ஒனறை உருவாக்குவதற்கும் இரு கட்சிகளும் முடிவுக்கு வந்துள்ளன. உயர் பதவிக்கான நியமனங்கள், தேசிய அளவிலான கொள்ளை திட்டங்கள் என்பன பற்றிய முடிவுகள் எடுக்கும்போது இக்குழுவுடன் இவை பற்றி கலந்துரையாடப்படும். இதுவே ஜே.வி.பியின ரின் பிரதான கோரிக்கைகளில் ஒன்றாகும்.

அத்துடன் சமாதானப் பேச்சுக்களின் போது புலிகளின இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றியே தான் கவனஞ் செலுத்தவிருப்பதாகவும் ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் போல் சமாதானப் செயற்பாட்டை மேற்கொண்டு செல்லமாட்டேன் என்றும் இக் கலந்துரையாடலின் போது ஜனாதிபதி ஜே.வி.பியினரிடம் உறுதியளித்துள்ளார். இதற்குப் பதிலளித்த ஜே.வி.பியினர் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி கவனம் செலுத்துவதில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது என தெரிவித்துள்ளார்.

மேலும் நோர்வே தரப்பினரின் பங்களிப்புப் பற்றி பேசும் போது வடக்கு -கிழக்கில் இடம்பெறும் கொலைச் சம்பவங்கள் பற்றி கவனத்திலெடுக்க வேண்டுமென இருதரப்பும் ஒரே கருத்தினை தெரிவித்துள்ளன. அத் துடன் நோர்வேயுடன் இணை அனுசரணையாளர்க ளாக இந்தியாவை அல்லது பின்லாந்தை அழைப்பது பற்றியும் பேச்சுக்கள் நடாத்தப்பட்டன. ஆனால் முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

மேலும் சமாதானச் செயற்பாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றி தமக்கு அறியத்தரவில்லை என ஜே.வி.பியினர் குற்றஞ்சுமத்தியதை அடுத்து சமாதானச் செயலகத்தை தலைவர் ஜயந்த தனபால வும் ஆலோசகர் பாலபட்டபெண்டியும் அழைக்கப்பட்டு தற்போதைய நிலவரம் பற்றி ஜே.வி.பியினருக்கு அறிவுறுத்தும் படி பணிக்கப்பட்டனர்.

மேற்படி கூட்டத்தில் சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதியுடன் மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் ஜே.வி.பி. சார்பில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச, நந்தன குணதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(த-6)

# இராசி பலன்

**04.06.2004**

**(வைகாசி 22, வெள்ளிக்கிழமை)**

**பிரதமை மு.ப. 7.50 வரை**

**துதியை பின்னிரவு.5.25 வரை**

**மூலம் பின்னிரவு 3.10 வரை**

**இராகுகாலம் 10.22-11.52 மணிவரை**

**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**

அமிர்த சித்தம், திருஞானசம்பந்தர் குருபூசை

**மேடம்**
காரியதாமதம், இடமாற்றம், எதிர்பாராத செலவு, கடினமுயற்சி.

**இடபம்**
வீண்பகை, காரிய தடங்கல், வாகன பயம், முழங்கால் வலி.

**மிதுனம்**
கீர்த்தி, சயனசுகம், காரிய அனுகூலம், பிரயாணம்.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, ஆரோக்கியம், குடும்ப நலம்.

**சிங்கம்**
பணத்தட்டுப்பாடு, அஜீரண ரோகம், காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம்.

**கன்னி**
தனவிரயம், மனச்சஞ்சலம், தாய்வழி உறவு, பிரயாணம்.

**துலாம்**
மனோதைரியம், எடுத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், பெருமையடைதல்.

**விருச்சிகம்**
விதண்டாவதம், முயற்சிதாமதம், அதிக செலவு, கௌரவக்குறைவு.

**தனுசு**
தெய்வசிந்தை, உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், பிரயாணம்.

**மகரம்**
காரிய அலைச்சல், அமைதிக்குறைவு, பணவிரயம், ஆரோக்கியக்குறைவு.

**கும்பம்**
உறவினர் சந்திப்பு, தெய்வசிந்தை, எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம்.

**மீனம்**
பிறர் உதவி, முயற்சி கைகூடும், அதிகாரம், தெய்வதரிசனம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# உறுதிபூசுதல் திருவருட்சாதனம் வழங்கல்

(சில்லாலை)

சில்லாலை " கதிரைமாதா" ஆலயத்தில் நாளை சனிக்கிழமை உறுதிபூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்படவுள்ளது.

இத்திருவருட்சாதனத்தை யாழ். ஆயர் வணபிதா தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வழங்கவுள்ளார்.

இதனை சில்லாலை பங்கிற்கு உட்பட்ட பல பகுதி களிலும் உள்ள மொத்தம் 60 இளைஞர்,யுவதியினர் பெற் றுக் கொள்ளவுள்ளதாக சில்லாலை பங்குத் தந்தை வண பிதா பி.அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (உ-58)

# ஆரோக்கியமான வாழ்க்கை முறையினால் இருதய நோய்களைக் குணப்படுத்தலாம்

**மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இருதய நோய்களிலிருந்து விடுபடவும் இராஜயோகப் பயிற்சி மிகவும் அவசியமானது என வைத்திய நிபுணர் சதீஸ் குமாரகுப்தா ஆய்வுகள் மூலம் கண்டறிந்த உணமைகள் கட்டுரை வடிவில் வலம்புரியில் வெளியாகிவருகின்றன. அக்கட்டுரையின் நான்காவது பகுதி இன்று வெளியாகிறது.**

உணர்ச்சிவசப்படுவது, அவசரப்படுவது,மனத்தளர்வு,கோபம் போன்ற குணங்களில் பெருமளவு மாற்றம் காணப்பட்டது.அவை பெருமளவு குறைந்திருந்தது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் இந்தக் குணங்கள் இன்னும் அதிகரித்திருந்தன. இந்தக் குணங்கள் இருதய நோய்க்கு நல்லது அல்ல என்று கூறப்பட்ட போதும் கூட இவை இவர்களில் அதிகரித்து இருந்தன.

ஒன்றை அறிந்திருப்பதற்கும் செய்வதற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறன்றது.கோபம் கூடாது என்று அறிந்திருந்தாலும் நாம் கோபப்படுகின்றோம். ஏனென்றால் கோபப்படாமல் இருக்கின்ற சக்தி எம்மிடம் இல்லை. பொதுவாக உடல் நலனில் 36 வீத முன்னேற்றம் முதலாவது பிரிவினரில் காணப்பட்டது.ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் உடல் நலன் இன்னும் மோசமடைந்து இருந்தது.

"அஞ்சியோகிரபி" சோதனையின் போது முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் 94வீதமானவர்களில் இருதய முடியுரு நாடிகளின் அடைப்பு திறந்திருந்தது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந் த வர்களில் 81வீத மானவாகளில் அடைப்பின் வீதம் அதிகரித்திருந்தது. இரண்டு பிரிவினரும் ஒரே மாதிரியான உணவு,உடற்பயிற்சி முறையை பின்பற்றியிருந்த் போதும் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்கள்இராஜயோக தியானத்தின் மூலம் மன அழுத்தம், பதட்டத்தில் இருந்து விடுபடுகின்ற கலைப் பயிற்சியை செய்யாத தால், அவர்களின்நாடிகளின் அடைப்பு மேலும் அதிகரித்ததில் இருந்து இந்த நோயை குணப் படுத்த அல்லது தடுப்பதற்கு மன தின் பங்கு மிகமிக முக்கியமான ஒன்றாக திகழ்கின்றது என்பது தெளிவாகின்றது.

## மனநிலை மாறவேண்டும்

உங்கள் மனதை நீங்கள் மாற்றாவிட்டால் இந்த அடைப்புக்களைத் திறக்க முடியாது.இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நன்றாகப் பின்பற்றியவர்களில் அதிகளவில் அடைப்புக்கள் திறந்து கொண்டன. ஏறத்தாழ 20 வீதம் திறந்து கொண்டன.ஆகவே எவ்வளவு தூரம் இதைப் பின்பற்றுகின்றோம். என்பதிலேயே இது தங்கியுள்ளது.90 வீதமான அடைப்பைக் கொண்ட ஒருவரில் ஏற்பட்ட மாற்றமானது அஞ்சியோ பிளாஷ்டிக் முறையில் ஏற்படக்கூடிய விரிவிலும் பார்க்கக் கூடுதலாகக் காணப்பட்டது.

ஆத்ம உணர்வுப் பயிற்சி செய்ததாலேயே இந்த அதிசயத்தை செய்யக் கூடியதாக இருந்தது. "நான் ஓர் ஆத்மா,நானே எனது இதயம்,ஈரல் என்பவற்றின் அதிபதியாக இருக்கின்றேன். நான் எனது நாடிகள் திறந்து கொள்ளுமாறு கட்டளையிடுகிறேன். நான் எனதுஈரல் நல்ல கொலஸ்திரோலை உருவாக்கும்படி கட்டளை இடுகின்றேன்." என்பது போன்ற நேரான சக்தி வாய்ந்த எண்ணங்கள் ஆத்ம உணர்வில் உருவாக்கப்படும் போது அவை உடலில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக் கின்றது.நீண்ட அடைப்புக் களும். ஒன்றுக்கு மேற்பட்ட அடைப்புக்களும் கூட திறந்து கொண்டன.

இருமுறை மாரடைப்பு நோயால் தாக்கப்பட்டு இதயம் விரிவடைந்துஅதனால் இதயம் இரத்தத்தை பாச்சும் வீதம்30ஆகக் காணப்பட்ட ஒருவர்,இதில் கலந்து கொண்ட போது அது40 வீதமாக அதிகரித்தது. இதயத்தின் இரத்தம் பாச்சும் சக்தி அதிகரித்திருந்தது. ஏனென்றால் நாடிகளின் அடைப்புக்கள் திறந்து கொண்டதால் அதிகளவு குருதி விநியோகம் இருதயத் தசைகளுக்குக் கிடைத்ததால் அவை மீண்டும புத்துயிர் பெற்று புதிய இதயத் தசைகள் உருவாக்கப் பட்டிருந்தன.100 வீத அடைப்புகள் கூட திறந்து கொள்வது அவதானிக்கப்பட்டது.

நெஞ்சுவலி மாத்திரைகள், நிரிழிவு மாத்திரைகள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட போதும், நோயாளிகள் குணமடையும் வீதம் கூடும்போது,அவற்றின் அளவு தொடர்ந்தும் குறைக்கப்பட்டது. சிலருக்கு நெஞ்சுவலி ஏற்படாததால் அந்த மாத்திரைகள் முற்றாக நிறுத்தப்பட்டன. இதனால் மருந்துகளுக்குச் செலவாகின்ற பணம் எவ்வளவோ குறைவடைந்து இரண்டாவது பிரிவைச் சேர்ந்த அதாவது கட்டுப்பாட்டுப்பிரிவைச் சேர்ந்தவர்கள் உணவையும், உடற் பயிற்சியையும் மட்டுமே பின்பற்றினார்கள்.அவர்கள் இராஜயோக தியானப் பயிற்சியை பின்பற்றவில்லை. அவர்கள் கோபப்படுவபவர்கள் ஆகவும் அவசரமான வாழ்க்கை வாழ்பவர்களாகவும் காணப்பட்டார்கள். அவர்களால் மன அழுத்தம், பதட்டத்தில் இருந்து விடுபட முடியவில்லை.ஆகவே அவர்களின் நாடிகளில் ஏற்பட்ட அடைப்பு மேலும் அதிகரித்திருந்தது.

ஆகவே நலமாக வாழ இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதை நீங்கள் தீர்மானியுங்கள் பல அம்சங்கள்,காரணிகள் இந்த அடைப்பை திறப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றன. நிறை குறைவதாலேயோ அல்லது மொத்த கொலஸ்திரோல் கெட்ட கொலஸ்திரோல்(ldl)குறைந்து நல்ல கொலஸ்திரோல்(hdl) கூடுவதனாலேயோ,ட்ரைகிளிசரைட் (tirglyceride)குறைவதாலேயோ அடைப்புக்களைத் திறக்க முடியாது.ஆனால் உணவு முறையும் உடற்பயிற்சயும் அடைப்புக்களை திறப்பதில் ஓரளவு உதவுகின்ற போதிலும் இராஜயோகமானது 30 மடங்கு இந்த அடைப்புக்கள் திறந்து கொள்வதில் உதவுகின்றது. ஆகவே இராஜயோக தியானபயிச்சியானது முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது.

### இராஜயோகத்தின் நன்மை

இராஜயோகம் என்றால் தன்னைத் தானே 'ஆட்சி செய்வது அதாவது சுய ஆட்சி பெறுவதாகும்.உங்கள் மனம்,புத்தி, பழக்கவழக்கங்கள், புலன் அங்கங்கள் எல்லாவற்றிற்கும் நீங்களே அதிபதி.இந்த நிகழ்ச்சித் திட்டமானது மிகவும் பயனுள்ள ஒரு திட்டமாகும்.இதன் மூலம் நெஞ்சுவலி குறைகின்றது. எடுக்க வேண்டிய மாத்திரைகளின் அளவு குறைகின்றது. கொலஸ்திரோல் மட்டம் குறைவடைகின்றது. உடற் பயிற்சி செய்யும் அளவு கூடுகின்றது. உளவியல் நடத்தை, உளவியல் காரணிகளில் ஆரோககியமான முன்னேற்றம் காணப்படுகின்றது.

இந்த ஆரோக்கிய வாழ்க்கை முறை நிகழ்ச்சித் திட்டமானது ஒரு பெரிய சனத்தொகையினருக்கும் பொருத்தமாக அமைகின்றது. இந்த இருதயநோய்களால் ஏற்படக்கூடிய விளைவுகளை குறைப்பதிலும் மரண வீதத்தை குறைப்பதிலும், இந்நோயை தடுப்பதிலும் இது பெரிய உதவியாக அமையலாம். இந்தி மொழியிலே ஆரோக்கியம் என்றால் "சுவஸ்"என்று கூறப்படுகின்றது. அந்த சொல்லின் அர்த்தம் சுய உணர்வு என்று பொருள்படுகின்றது.ஆகவே ஆரோக்கியம் என்றால சுய உணர்வு அதவாது ஆத்ம உணர்வு ஆகும் .ஆரோக்கியமான வாழ்க்கை முறை என்றால் ஆத்ம உணர்வுடைய வாழ்க்கை முறையாக அமைகின்றது.

நீங்கள் எதைச் செய்தாலும் ஆத்மாவாகிய நானே அதைச் செய்கின்றேன் என்ற உணர்வுடன் செய்ய வேண்டும் .ஆத்மாவே இந்த சரிதத்தைப் பயன்படுத்தி கண் மூலம்பார்க்கின்றார். காது மூலமாகக் கேட்கின்றார். இதயத்தைப் பயன்படுத்தி குருதியை முழு உடலுக்கும் செலுத்துகின்றார்?ஆத்மா உடலை விட்டுப் பிரிந்தால் நாம் பார்க்கவோ, கேட்க்வோ,நடக்கவோ முடியாது. இதயம் குருதியை பாய்ச்சவோ, உணவுசமிபாடு அடையவோ முடியாது ஆத்மாவே முழு உடலையும் இயக்குகின்றார்.

ஒவ்வொரு எண்ணத்திலும் வார்த்தையிலும் செயலிலும் ஆத்ம உணர்வோடு வாழ்வது ஆரோக்கியமான வாழ்விற்கு வழி அமைக்கின்றது.இராஜயோக தியானப்பயிற்சி ஆத்ம உணர்வை வளர்த்துக் கொள்ள உதவுகின்றது. நீங்கள் ஆரோக்கியமாக வாழ விரும்பினால் உங்கள் மனதை இராஜயோகத் தியானத்தின்மூலம் சுத்தப்படுத்துங்கள் உங்கள் உடலை சரியான உணவுப் பழக்கத்தின் மூலமும் உடற் பயிற்சியின் மூலமும் சுத்தப்படுத்துங்கள்.

சரீரம் என்று உங்களை நீங்கள் நினைத்தால் அந்த சரீர உணர்வானது சுயநலமுடையவர்களாக உங்களை மாற்றுகின்றது. நான், எனது என்ற உணர்வு அகங்காரம் ,கோபம், பேராசை, காமம், பற்று போன்ற எதிர்மறையான குணங்களை உருவாக்குகின்றது. சுய அடிமைத்தனத்தாலும் உங்கள் நடத்தையாலும் மனத்தளர்வு (depression)ஏற்படுகின்றது.

ஆத்ம உணர்வுடையவர்கள் சகலரையும் ஆத்மாவாகக் கருதுவதால்,அவர்கள் எல்லோரும் சகோதரர்கள் ஒரே தந்தையாகிய இறைவனுடைய குழந்தைகள் என்ற உணர்வோடு எல்லோரிடமும் அன்பு,கருணை நிறைந்தவர்களாக,அமைதியாக வாழ்கின்றார்கள்.சுய கௌரவத்தோடு அகங்காரமற்றவர்களாக இருக்கின்றார்கள்.அவர்கள் இந்த உலகிலே ஒவ்வொருத்தரும் தனித்துவமானவர்கள்.நாம் எதிர்பார்ப்பது போல் இன்னொருவர் இருக்கமாட்டார் என்பதையும் நான் ஓர் வேலையை ஒருவிதமாகச் செய்யும் போது இன்னொருவர் அதைவேறு விதமாகச் செய்யலாம் என்பதையும் புரிந்து கொண்டு மற்றவர்களை உற்சாகப்படுத்துபவராக இருப்பார்.

ஆனால் சரீர உணர்வினாலேயே"A"வகையைச் சேர்ந்த நடத்தை (type A personality) ஏற்படுகின்றது.அப்படிப்பட்டவர் தானே மிக அனுபவசாலி, சிறந்தவன் என தன்னைக் கருதிக் கொள்கிறார்.தான் எவ்வாறு எதிர்பார்க்கின்றாரோ அவ்வாறே மற்றவாகளும் நடந்து கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கின்றார். அவர் வேலைப்பளு அதிகம் உடையவராகவும் நேரப் பற்றாக்குறை உடையவராகவும் இருப்பதால் இப்படிப்பட்ட நடத்தையை உடையவர்கள் அதிகளவு மாரடைப்பு நோயால் பாதிக்கப்படுகின்றார்கள் .ஆத்மாவானது அமைதி, அன்பு,சந்தோஷம், தூய்மை, சக்தி, பேரானந்தம் மற்றும் ஞானம என்ற ஏழு ஆதியான குணங்களைக் கொண்டதாக இருக்கின்றது.


### ஆத்மீக ஞானம்

நீங்கள் ஞானம் நிறைந்தவராக இருக்கும் போது உடலைப்பற்றிய ஞானம் அல்ல தன்னைப் பற்றிய ஞானம் அதாவது ஆத்மீக ஞானம். ஆத்மாவைப்பற்றியும்,ஆத்மாக்களின் தந்தையான பரமாத்மாவைப் பற்றியும் உலக சக்கரத்தைப் பற்றியும் அறிவுடையவராக இருக்கும் போது உலகச் சக்கரத்தில் ஓர் காலப்பகுதியிலே ஆத்மாக்களாகிய நாம் ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் ஆதியான ஏழு குணங்களும் நிறைந்தவராகவும் உள்ளோம் என்பதையும் இப்போது அறியாமை இருள் நிறைந்தவராக உள்ளோம் என்பதையும் புரிந்து கொள்கின்றோம்.அத்தோடு மீண்டும் நாம் தூய்மையானவராகவும் ஞானம் நிறைந்தவராகவும் ஆதியான ஏழு குணங்கள் நிறைந்தவராகவும் வரவேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதைப் புரிந்து கொள்கின்றோம்.

உலக நாடகத்தைப்பற்றிய அறிவு இருக்கும் போது இந்த உலக நாடகத்திலே ஒவ்வொரு ஆத்மாக்களும் சரீரம் என்ற ஆடை அணிந்து தமக்கே உரிய தனித்துவமான பாகத்தை நடிக்கின்றார்கள் என்பதையும் எல்லோரும் முக்கியமானவர்களே என்பதையும் புரிந்து கொள்ளும் போது இந்த ஞானத்தால் மனம் சுத்தமாகின்றது. உறவு,உணவு எல்லாமே தூய்மை அடைகின்றது.தூய்மையான மனமே அமைதி, அன்பு, சந்தோஷம், பேரானந்தம்,சக்தி என்பவற்றை அளிக்கின்றது.

தற்போதுள்ள மருத்துவ விஞ்ஞானம் சரீரத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகளையே செய்துவருகின்றது. ஆனால் நோய்கள் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.புதிய புதிய நோய்களும் அவ்வப்போது தோன்றிக் கொண்டே இருக்கின்றன.ஆனால் உயிருள்ள ஜீவன் மேல் அதாவது ஆத்மாவைப் பற்றி எந்த ஆராய்ச்சியும் செய்யப்படவில்லை.ஆத்மா இல்லையேல் வாழ்க்கையே இல்லை .குணப்படுத்த முடியாத நோய்களைக் கூட உங்களுக்குள் நீங்கள் ஆழமாகச் சென்றுஅந்த நோய்க்குக் காரணமான மூல காரணங்களைக் கண்டு பிடித்தால்,குணமடையச் செய்யலாம்.

சில நேரங்களில் எங்களுடைய நடத்தை,சந்தேகப் புத்தி, கோபம்,அவசரம்,பிழையான உணவு,உடற்பயிற்சிமுறை, பிழையான நித்திரை கொள்ளும் பழக்கம் என்பன இருதய நோய் போன்ற பல நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன. ஆகவே அவற்றைக் கண்டுபிடித்து உங்களை நீங்களே மாற்றிக் கொள்ளுங்கள்.உயர் மட்டத்தில் ஆத்மாவும் நடுமட்டத்தில் மனமும் தாழ் மட்டத்தில உடலும் இருப்பதாகக் கருதினால், தற்போதைய மருத்துவ விஞ்ஞானமானது தாழ்மட்டத்திலே கவனம் செலுத்தி அதைக்குணப்படுத்தவே முனைகின்றது.



இந்த மூன்று மட்டங்களும் ஒரே நேரத்தில் குணப்படுத்தப்பட வேண்டும்.இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையதாக இருக்கின்றது. தாழ்மட்டத்தை மாத்திரம் குணப்படுத்தும் போது, நடு,உயர் மட்டங்களில் இருந்து அந்த நோய் மீண்டும் தோன்றுகின்றது.உதாரணமாக குடல் அழற்சிக்கு மாத்திரை எடுக்கும் போது அது குறைவடைகின்றது. பின் மனதிலும், ஆத்மாவிலும் உள்ள அதற்கான மூல காரணங்கள் மாற்றப்படாததால் அது மீண்டும் ஏற்படுகின்றது.

அதிமேலானவராக,மிகவும் உயர்ந்த மட்டத்தில் பரமாத்மாவாகிய இறைவன் இருக்கின்றார். அவர் சகல சக்திகளின் கடலாக, அமைதி,அன்பு,சந்தோஷம்,ஞானம், தூய்மை என்பவற்றின் கடலாக விளங்குகின்றார். நாங்கள் அமைதியில்லாதபோது அவரிடம் அமைதியையும்,சந்தோஷம் இல்லாத போது அவரிடம் சந்தோஷத்தையும்,பலவீனமாக இருக்கும் போது சக்தியையும் கேட்கின்றோம். அவர் ஒருவரே கடலாக இருக்கின்றார். எல்லோரும் ஏதோ ஒரு முறையில் அவரை நினைவு செய்கின்றார்கள்.நாங்கள் சரீர உணர்வுடையவராக இருக்கும் போது கோபம், அகங்காரம்,பற்று,பேராசை,காமம், பொறாமை,வெறுப்பு போன்ற எதிர் மறையான குணங்களை உடையவர்களாக இருக்கின்றோம். இதனால் மனதிலே எதிர்மறையான எண்ணஙகள், உணர்ச்சி, மனோநிலை மற்றும் ஞாபகங்களே காணப்படுவதால், அன்பு குறைவையும் பாதுகாப்பின்மையையும் உணர்கின்றோம். இதனாலேயே உடலில் சக்தி பாய்வதில் தடை ஏற்படுகின்றது. அதுவே உடல அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக உணவு செல்கின்ற களத்தில் அடைப்பு ஏற்பட்டு உணவு இரப்பைக்குள் செல்லாவிட்டால் அசௌகரியமாக இருக்கும் .அது திறந்து கொண்டால் உணவு இரப்பைக்குள் செல்லும் போது இலகுவான உணர்வு இருக்கும் .அன்பு இதயத்தினூடாகப் பாயவில்லை என்றால் இதயம் வெறுமையை உணர் கிறது. அதுவே வலியை ஏற்படுத்துகின்றது.

(தொடரும்)

# பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயார்
# பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு

(புதுடில்லி)

கிரிமினல் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சிலர் மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றி



ருப்பதை நாடாளுமன்றத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி பிரச்சினையாக எழுப்பினால் அதை எதிர்கொள்வோமென்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் பி.ரி.ஐ. செய்தி நிறுவத்துடன் அவர் பேசுகையில் இது தொடர்பான பிரச்சினை எவ்வாறு கையாளப்படுமெனச் செய்தியாளர்கள் அவரைக் கேட்டதற்கு பிரச்சினையில்லாத வாழ்க்கை எதுவும் இல்லையென்று யதார்த்தமாக அவர் பதிலளித்தார்.

மக்களவை உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்த பின் வெளியே வந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாயைச் செய்தியாளர்கள் சந்தித்த போது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளோம் என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

மக்கள் நலனுக்கு ஏற்ற வகையில் நாடாளுமன்றத்தில் பிரச்சினைகளை எழுப்பி, ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக பா.ஜ.க.செயற்படும் என்றார் அவர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் செயல் திட்டத்துக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்த பட்சத் திட்டத்துக்குமிடையே ஏராளமான வித்தியாசம் இருப்பதாக வாஜ்பாய் குறிப்பிட்டார். (து)



**இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமைநீதிபதியாக இருந்த ராஜேந்திர பாபுவின் பதவிக்காலம் கடந்த செவ்வாய்க்கிழமை முடிவடைந்ததால் புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட ரமேஷ்சந்திர லஹோடிக்கு குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.**


## இந்தியச் செய்திகள்

## வெற்றிடங்கள் நிரப்பப்படுமா?

(சென்னை)

புதிது புதிதாக அறிவிப்புக்களை வெளியிடும் முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக அரசில் ஏ,பி, சி,டி பிரிவுகளில் இன்னமும் நிரப்பப்படாத 60 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வலியுறுத்தியுள்ளார்.

இட ஒதுக்கீடு அடிப்படையிலேயே இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டுமென்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறினார். (து)





## அமெரிக்கா செல்ல வை.கோவுக்கு உயர் நீதிமன்றம் அனுமதி

(சென்னை)

பொடா வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. அமெரிக்கா செல்ல சென்னை உயர் நீதிமன்றம் அனுமதியளித்தது.

அமெரிக்காவிலிருக்கும் தனது மகளிடம் 11 மாதம் நிரம்பிய பேர்த்தியைக் கொண்டு சென்று ஒப்படைக்க அனுமதிக்க வேண்டுமென்றும், பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்திலுள்ள தனது கடவுச்சீட்டை தன்னிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டுமென்றும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வை.கோ மனுதாக்கல் செய்திருந்தார்.



அந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற விடுமுறைக்கால நீதிபதிகள் பி.கே. மிஸ்ரா, ஏ.குலசேகரன் ஆகியோரைக் கொண்ட குழு, வை.கோ. அமெரிக்கா செல்வதற்கான அனுமதியை அளித்தது.

அவரது கடவுச் சீட்டை அவரிடம் ஒப்படைக்க பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் வரும் 20 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ வை.கோ. இந்தியா திரும்பிவிட வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர். (து)

## பொடா சட்டத்தை விலக்க சமாஜவாதக் கட்சி ஆதரவு

பாதுகாப்புத் துறையில் முந்திய ஆட்சியில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்து மறு ஆய்வு செய்யப்படுமென்று அறிவித்திருப்பதற்குச் சமாஜவாதக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அமர்சிங் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் முன்னாள் அமைச்சர்கள் மீது பழிவாங்கும் நோக்குடன் செயற்படுவது சரியல்ல எனக் கூறினார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு குறைந்தபட்ச செயல் திட்டத்தை சமாஜவாதக் கட்சியிடம் காட்டாத போதிலும் மத்திய அரசுக்கு பிரச்சினை அடிப்படையிலான ஆதரவு தொடரும் என்றும் அவர் கூறினார்.

பொடா சட்டத்தை விலக்கிக் கொள்ளவிருப்பதை அவர் வரவேற்றார். (து)

## தமிழக அரசு வாரி வழங்கும் சலுகைகள்

(சென்னை)

தமிழ் நாட்டில் அரசு மருத்துவமனைகளில் பிற நோயாளர்களின் அனுமதிச் சீட்டுக் கட்டணம், பார்வை நேரமல்லாத மற்றைய நேரங்களில் நோயாளரைக் காண்பதற்கான நுழைவுக் கட்டணம் நேற்று முன்தினம் முதல் ரத்து செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

சென்னையில் அவர் விடுத்த அறிக்கையில் ஏழை, எளிய மக்களின் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேபோல, திருக்கோவில்களில் வசூலிக்கப்படும் காலணி பாதுகாப்புக் கட்டணம் ரத்து செய்யப்படுவதாகவும், மக்களின் காலணிகளை பாதுகாக்கத் திருக்கோவில்களே நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவத்துள்ளார்.

ஜெயலலிதா விடுத்துள்ள மற்றொரு அறிக்கையில் உள்ளூராட்சி அமைப்புக்களின் நிர்வாகத்திலுள்ள வாகனங்களை நிறுத்தும் இடங்களில் நிறுத்தப்படும் மிதிவண்டி, இரு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் முதலியவற்றுக்கு வசூலிக்கப்படும் கட்டணங்கள் ரத்துசெய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா உள்ளிட்ட தனியார் பேருந்துகளுக்கு நாளொன்றுக்கு 20 ரூபா, டெம்போ வகைகளுக்கு நாளொன்றுக்கு 30 ரூபா, லொறிகளுக்கு நாளொன்றுக்கு 50 ரூபாவுக்கு மேல் கட்டணங்கள் வசூலிக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து)

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மக்களவை கூடியது

(புதுடில்லி)

14ஆவது மக்களவையின் முதற் கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மக்களவையின் இடைக்காலத் தலைவர் சோமநாத் சட்டர்ஜி உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

முன்னதாக் அவைக்கு வந்த பிரதமர் மன்மோகன் சிங்கை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஸாத் மக்களவைச் செயலாளர் மல்ஹோத்திரா மற்றும் பலர் வரவேற்றார்கள்.

நாடாளுமன்றக் கூட்டம் தொடங்குவதையொட்டிப் புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முக்கிய இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

நாடாளுமன்ற வளாகத்துக்குள் உடனடியாக வாகனங்கள் நுழைய முடியாதபடி தடுப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மக்களவையின் இடைக்காலத் தலைவராக குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்ட சோமநாத் சட்டர்ஜியை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஸாத் வரவேற்றார்.

இந்த புதிய பணி தமக்கொரு சவாலக இருக்குமெனத் தெரிவித்த சோமநாத் சட்டர்ஜி, முதல் இரண்டு நாட்கள் சபைக்குத் தலைமை தாங்கக் குடியரசுத் தலைவர் தனக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததற்கு நன்றி தெரிவித்தார். (து)



**கர்நாடக முதலமைச்சரான தரம் சிங் புதுடில்லி வந்து பிரதமர் மன் மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.**

## மருத்துவ, பொறியியல் கட்டணங்கள் குறைக்கப்படாவிட்டால் போராட்டம்

மகாராஷ்டிரத்தைப் பின்பற்றி தமிழகத்தில் மருத்துவ, பொறியியல் கல்லூரிக் கட்டணங்களைப் பாதியாகக் குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய நுழைவுத் தேர்வில் பங்கேற்ற மாணவர்களில் நிரப்பப்பட்ட இடங்கள் போக ஏராளமான மாணவர்கள் மிஞ்சியிருப்பார்கள். இந்நிலையில் தனியாக இன்னொரு நுழைவுத்தேர்வு எதற்கு?.


சுயநிதிக் கல்லூரிகளின் கட்டணத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட நீதிபதி ராமன் கமிட்டியின் பணிகள் மெதுவாக நடந்து வருகின்றன. இதனால் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் மிதமிஞ்சிய கட்டண விகிதங்கள் தொடரக்கூடிய அபாயம் உள்ளது. அப்படி தொடர்ந்தால் ஏழை எளிய மாணவர்கள், குறிப்பாக் கிராமப்புற மாணவர்கள் தகுதி இருந்தும் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் வாய்ப்பை இழந்து விடுவார்கள்.

நீதிபதி ராமன் கமிட்டி பரிந்துரை வரும் வரை காத்திருக்காமல் உடனடியாக மருத்துவம் மற்றும் பொறியியல் கல்விக் கட்டணங்களைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என ராமதாஸ் விடுத்த ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். (து)

# மகத்தான மந்திர தீட்சையின் முக்கியத்துவமும் நோக்கங்களும்

## வெள்ளி நற்சிந்தனை

மந்திர ஜபம் போன்றவற்றை ஆரம்பிப்பதாக எடுத்துக்கொள்ளும் பிரதிக்ஞையே தீட்சை எனப்படும்.



அதன் நோக்கங்களும் முறைகளும் பல விதங்களில் அமைந்துள்ளன.

உதாரணமாக, ஒரு யக்ஞத்தின் மூலம் ஒரு குறிக்கோளை அடைவதற்காக - அந்த யக்ஞத்தைச் செய்வதாக - எடுத்துக் கொள்ளும் பிரதிக்ஞையே யக்ஞ தீட்சை எனப்படும்.

### மந்திர தீட்சை

ஆனால் இங்கு இப்போது நாம் மந்திர தீட்சையைப் பற்றி மட்டும் பார்ப்போம்.

ஒரு புனித மந்திரத்தை முறைப படி உச்சாடனம் செய்வதாக ஒரு சாதகன் எடுத்துக் கொள்ளும் பிரதிக்ஞையே மந்திர தீட்சை என்று வழங்கப்பெறுகிறது.

தெய்வீக ஆற்றல் வாய்ந்த ஒரு மறைபொருளோடு கூடிய சூத்திரமே மந்திரம் எனப்படும்.

அதை ஜெபிப்பதால் சாதகன் பிறவிக கடலில் இருந்து விடுதலை பெறுகிறான். மந்திர தீட்சையின் நோக்கமும் அதுவேயாகும்.

"பிறவிக் கடலில் இருந்து ஜெபிப்பவனை எது மீட்கிறதோ அதுவே மந்திரமாகும்" என்று சமஸ்கிருதத்தில் மந்திரத்திற்கு ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

அந்த விளக்கமே சொல் இலக்கணப்படி மந்திரம் என்ற சொல்லுக்குப் பொருளுமாகும். அவ்விதமே சொல் இலக்கணப்படி, "மந்திர உபதேசம் பெற்று குரு விதிக்கும் ஒரு புனித மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்குவதே மந்திர தீட்சை எனப்படும்" எனப்படும்.

பண்டைக்காலத்தில் வேத மந்திரங்களே மந்திரங்கள் என வழங்கப்பட்டன. அவை யாவும் கேள்விகளைப் பற்றி அக்காலத்தில் வாழ்ந்த ரிஷிகளின் வாக்குகளாகும். அந்த மந்திரங்களை எவ்விதம் பிரயோகம் செய்வது என்பதைப் பற்றி நாம் பிராமணங்களில் பார்க்கிறோம்.

காலப்போக்கில் தந்திர சாத்திரங்கள் தோன்றியவுடன் மந்திர மெனற சொல்லுக்கு வேறு பொருள ஏற்பட்டது.

### இறைவனின் அம்சம்

அதன் படி ஒரு மந்திரமென்பது இறைவனின் ஏதாவது ஓர் அம்சத்தைக் குறிக்கும் சூட்சும மான சூத்திரமாகும். மந்திர தீட்சை பெறாதவர்களுக்கோ அது என்னவென்று புரியவே புரியாது. அவ்வளவு சூட்சுமமானவை (ரகசியமானவை) தந்திர சாஸ்திர மந்திரங்கள்.

மந்திரங்கள் என்பவை மனிதர்களால் இயற்றப்பட்டவையோ அல்லது தோற்றுவிக்கப்பட்டவையோ அல்ல.

அவை ஞான குருவிடம் இருந்து அவரது சீடர்களுக்குப் பரம்பரை பரம்பரையாக வந்தவை. அவை நிரந்தரமாக என்றும் இருப்பவை.

வேத கால ரிஷிகள் தங்களது ஞான திருஷ்டியில் அறிந்தவையே வேதமந்திரங்கள்.

ஆனால் தந்திர சாஸ்திர மந்திரங்களோ பார்வதியின் கேள்விகளுக்குச் சிவபெருமானால் அழிக்கப்பட்ட பதில்களாகும்.

தந்திர சாஸ்திரங்கள் சாஸ்திரத்தில் மந்திரம் என்பது, இறைவனின் ஓர் அம்சத்தைக் குறிக்கும் தெய்வீக ஆற்றல் வாய்ந்த அதி சூட்சுமமான மறை பொருளாகும்.

அவ்விதம் இறைவனின் பல்வேறு அம்சங்களுக்குப் பல்வேறு மந்திரங்கள் இருக்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால் மந்திர தீட்சை என்பது ஒரு குரு தமது சீடருக்கு உபதேசித்தருளும ஒரு மந்திரமாகும்.

இந்தத் தீட்சையின் போது சீடனானவன் தனக்கு உபதேசிக்கப்பட்ட புனித மந்திரத்தை ஜெபிப்பதாகவும் அதன் மீது தியானம் செய்வதாகவும் உறுதிமொழி எடுத்துக்கொள்கிறான்.

வேத மந்திரங்களுக்கும், தந்திர மந்திரங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

சில தெய்வங்களை மகிழ்விக்கச் செய்ய ஓதப்படும் குறுகிய துதிகளே வேத மந்திரங்களாகும்.

ஆனால் தந்திர மந்திரங்களோ நாம் மேலே கூறியபடி சில தெய்வங்களின் சில அம்சங்களைக் குறிக்கும் மர்மமான சூத்திரங்களேயாகும்.

மந்திர தீட்சை எனப்படுவது வேத காலத்திலும் வழக்கத்தில் இருந்து வந்தது.

உதாரணமாக, புகழ் பெற்ற காயத்திரி மந்திரம் ஒரு வேத் மந்திரம் தான்.

வேதம் பயில குருவை அடையும் ஒரு சீடன் முதன் முதலில் காயத்திரி மந்திரத்தையே உபதேசமாகப் பெறுகிறான்.

ஆனால் தாந்திரிக மந்திரங்களோ காயத்திரியைப் போல் அவ்வளவு நீண்டதாக இல்லாமல் சுருக்கமான சூத்திரங்களைக் கொண்டவையாக விளங்குகின்றன.

### மந்திரங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை

மந்திரங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றின் தோற்றத்தில் அல்லது அமைப்பில் எந்தவித மான மாறுபாடும் எற்படக்கூடாது.

அவற்றில் இருந்த எதையாவது நீக்கவோ அல்லது அவற்றுடன் வேறு ஏதேனும் சொற்களைச் சேர்க்கவோ நமக்கு அதிகாரம் கிடையாது.

தற்காலத்தில் வேத மந்திரங்கள் எழுதப்படுகின்றன; அச்சிடப்படுகின்றன. ஆனால் பண்டைக் காலத்திலோ அது போன்று இல்லாமல் குருவினால் சீடனுக்கு அவை கற்பிக்கப்பட்டன.

சீடன், குரு சொல்லிக் கொடுக்கும் மந்திரங்களைக் கேட்டு அவற்றை மனனம் செய்யவேண்டும். எனவேதான் அவற்றிற்கு 'ஸ்ருதி' என்ற பெயரும் வழங்கப்பட்டிருந்தது. அவை முழுமையடைந்த மந்திரங்களானதால் சீடனும், குருவும் கட்டளைகளைப் பின்பற்றி அவற்றின் மீது தியானம் செய்யவேண்டும்.

மந்திரங்கள் முழுமையானவை என்பதால் அவற்றில் எந்தத் திருத்தமும் செய்ய சீடனுக்கு உரிமை கிடையாது.

வேத மந்திரங்களைப் போன்றே தாந்திரிக மந்திரங்களும் அவற்றின் அமைப்பில் எந்த மாறுபாடும் இல்லாமல் மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் அவை மிகவும் இரகசியமானவை.

உபதேசிக்கப்பட்ட ஒரு தாந்திரிக மந்திரத்தைச் சீடன் இரகசியமாகவே வைத்துக் கொள்ளுவான். அவ்விதம் அதை இரகசியமாக வைத்துக்கொண்டால் தான் அந்த மந்திரமும் மிகவும் சக்திவாய்ந்ததாகவும் விளங்கும்.

ஒரு மந்திரத்தை உரக்க உச்சாடனம் செய்தாலோ அது தனது வலிமையை இழந்து விடுகிறது.

எல்லா மந்திரங்களும் சக்தி வாய்ந்தவைகளே ஆகும். அவை நம்முள் ஓர் ஆன்மீக அறிவையும் தோற்றுவிக்கிறது.

மேலும் தீவிரமான மந்திர ஜெபத்தால் அந்த மந்திரத்தின் மூர்த்தியும் நமக்குக் காட்சி தந்து அருள் புரிகிறார்.

ஆனால் இக்காலத்திலோ வேத மந்திரங்களும் சரி தாந்திரிக மந்திரங்களும் சரி புத்தகங்களில் அச்சிடப்படுகின்றன. ஆதலால் புத்தகங்களின் மூலம் அவை நமக்குச் சுலபமாகக் கிடைக்கின்றன. ஆனால் அவ் விதம் புத்தங்களின் மூலம் பெறுவது நமது ஆன்மீக சாதனைக்கு அவ்வளவாகப் பயன்படாது.

'ஓர் ஆசானிடம் இருந்து பெறும் ஞானமே பயனளிக்கவல்லது' என்று உபநிடதங்கள் திட்ட வட்டமாக வலியுறுத்துகின்றன. ஆன்மீக அறிவு நமக்குப் பயனளிக்கவேண்டுமானால் அதை நாம் தகுந்த ஓர் ஆசானிடம் இருந்தே பெறவேண்டும். இதையே வேதங்களும் புராணங்களும் வலியுறுத்துகின்றன. ஒரு குரு ஒரு மந்திரத்தை ஒரு சீடனுக்கு உபதேசிப்பதோடு மட்டும் இல்லாமல் தனது ஆன்மீக சக்தியிலும் சிறிதளவு அவனுக்கு வழங்குகிறார். புத்தகங்களின் மூலம் நாம் மந்திரங்களைத்

**ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தா**

தெரிந்து கொள்ளும் போதோ அத்தகைய ஆன்மீக சக்தியைப் பெற முடியாது. உதாரணமாக தர்ம சாஸ்திரங்களைப் பற்றி நாம் புத்தகங்களில் படிக்கலாம். அவ்விதம் படிப்பதும் நமக்குள் ஓர் அளவுக்கு நல்ல ஒரு விளைவையும் ஏற்படுத்தலாம். ஆனால் அதையே நமது மதிப்பிற்குரிய ஒருவரின வாய் மூலம் நேரடியாகக் கேட்கும் போதே அதனுடைய நல்ல விளைவு சொல்ல முடியாத அளவுக்கு ஏற்படுகிறது.

ஒரு விளக்கில் இருந்துதான் மற்றொரு விளக்கை ஏற்றமுடியும். அது போலவே மந்திர தீட்சையின் போது சற்குரு வழங்கும் ஆன்மீக ஒளியை நம்மால் உணர முடியாத போதிலும் அது ஏற்படவே செய்கிறது. □

# ஊடகவியலாளர் நடேசனின் கொலை போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயம்

## பாலகுமாரன் அஞ்சலி உரை

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர். ஜி.நடேசனின் கொலை தமிழீழ தேசத்தின் மீதான ஒரு அராஜக நடவடிக்கை. இந்த ஊடகவியலாளனின் கொலைக்குப் பின்னால் ஒரு வரலாறே உருவாகப் போகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் க.வே.பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மறைந்த நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசனின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், நாங்கள், சிங்கள சமூகம திருந்திவிட்டது, சிங்கள தேசததில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் நீண்டகால போரின் விளைவாக சிங்கள ஆட்சியாளர்களின் மனங்களில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது எனவும் நினைத்தோம்.

நாங்கள் வீதிகள் அமைத்தோம். கட்டடங்கள் அமைத்தோம். புதிய வாழ்வைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் இன்று எமது தேசத்தில் போர் இன்னும் முற்றுப்பெறவில்லை. போராட்டம் முடியவில்லை என்றே சொல்ல வைக்கிறது இந்தப் பத்திரிகையாளனின் படுகொலை.

இந்த தேசத்திலே பேரினவாத அடக்குமுறைகளை இன்னமும் நிகழ்த்தத்தான் போகின்றார்கள் என்பதை எதிரி மறைமுகமாக எடுத்துக்காட்டியிருக்கின்றான். நடேசன் தமிழ் சமூகத்தில் ஒரு சிறந்த ஊடகவியலாளர். அத்துடன் எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக விளங்கியவர். போராட்ட சூழலில் தேசப்பணியை தோளில் சுமக்கக் கூடிய ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

ஒரு பெரிய விழிப்புணர்வு ஏற்படுவதற்கு இவர் காரணமாக இருந்தவர். இன்று இந்தக் கொலைக்கு ஊடாக எதிரி எமது சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகின்றான். புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க விரும்புகின்றானா? நிபந்தனைகளை கைவிட்டு பேச்சுக்கு புலிகளை அழைப்பதற்காக தீட்டப்பட்ட திட்டமா? அல்லது எமது தேசத்தை கூறுபோட நினைக்கின்றார்களா? தென் தமிழீழத்திலே உள்ள தமிழ் உணர்வை நலிவடைச் செய்ய நினைக்கிறார்களா? எம்மை எம் தேசத்தில் இருந்து விரட்டுவதற்கு திட்டம் போடுகின்றார்களா? அல்லது புலிகளை ஒட்டு மொத்தமாக பலவீனப்படுத்தி வாய்ப்புக்கிடைக்கின்ற பொழுது நசுக்குவதற்கு திட்டம் போடுகின்றார்களா? என்னவாகவும் இருக்கட்டும்.

இவருடைய சாவு வரலாற்று நிகழ்வாக மாறியுள்ளது. எதிரி எதை விரும்புகிறான் என்பது எனக்குத் தெரியாவிட்டாலும் எமது தலைவருக்குத் தெரியும். அன்று தொடக்கம் இன்று வரை பல்லாயிரக்கணக்கான பிரதம மந்திரிகள், பல பாதுகாப்பு அமைச்சர்கள், பல ஜனாதிபதிகள் வந்து போகின்றார்கள். எவராலும் பிரயோசனம் இல்லை. இதே கருத்தினையே நடேசனும் கூறிவந்தார் என்று குறிப்பிட்டார். (உ-121)

# நேர்முகத் தேர்வு

(சாவகச்சேரி)

வேலையற்ற பட்டதாரிகளிற்காக அண்மையில் அரசால் அறிவிக்கப்பட்ட அரசாங்கத்துறையில் பொருத்தமான பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகம் மூலம் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 7,8 ஆம் திகதிகளில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-29)

# சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பது பற்றி யாழ்.செயலகத்தில் மாதம் ஒரு மாநாடு

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவது குறித்து மாதம் ஒருமுறை செயலகத்தில் கூடி ஆராய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பான உயர்மட்ட மாநாடொன்று கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம் பெற்றபோது மேற்படி தீர்மானம் எடுககப்பட்டது. பிரதேச செயலர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் , வட பிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள், இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், தனியார் சிற்றூர்திச் சங்க உறுப்பினர்கள், சிறைச்சாலை மற்றும் கல்விசார் அதிகாரிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.


* வாகன அனுமதிப் பத்திரம மற்றும் பாதை அனுமதிப்பத் திரம் என்பன இல்லாதோரை வாக னம் ஓட்ட முற்றாகத்தடை விதித்தல்.
* வீதிகளில் பொருட்களைப்பரப்பி வியாபாரம் செய்தலைத் தடுத்தல்.
* வீதிகளில போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள காவலரண்கள், சோதனைச சாவடிகளை அகற்றுதல்
* வீதி ஓரங்களில் வாகனங் கள் தரித்து நிற்பதை நிறுத்துதல்.
* வாகனங்கள் வைத்திருப்பவர்களுக்கு வீதி ஒழுங்கு பற்றிய வகுப்புக்களை நடத்துதல்.
* பொது இடங்களில் வாகனங்களின வேகத்தைக் கட்டுப்படுத்துதல்.
* சமாந்தமாகச் சைக்கிளில் செலவதைத் தடுத்தல் ஆகியன தொடர்பில் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், கொலை, கொள்ளை, களவுச் சம்பவங்களைத் தடுப்பதில் சமூக, பொது நிறுவனங்களின் பங்களிப்புப் பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்.சிறைச்சாலையில் உள்ள கைதிகளை தீர்ப்பு வழங்கப்பட்டோர், தீர்ப்பு வழங்கப்படாதோர் என்ற வகைப்படுத்தலில் வைத்திருப்பது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.(உ-19)

# சிறுமியைக் கொன்ற சிறுமி!
# ஜப்பானை உலுக்கிய கொலை

(டோக்கியோ)



சுமார் 11வயது நிரம்பிய ஆறாம் தரத்தில் கல்வி பயிலும் ஜப்பானியச் சிறுமி ஒருத்தி தனது சக மாணவியைக் கத்தியால் கிழித்து கொலை செய்த சம்பவத்தால் ஜப்பானியர்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

மதிய உணவுக்கான இடைவேளையின் போது 12 வயது நிரம்பிய சற்றோமி மிற்றாரி எனும் சிறுமியைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி அவளது தொண்டையைத் துண்டித்துக் கொலை செய்த சிறுமி 11வயது நிரம்பியவர் என்று அடையாளம் காணப்பட்டார். பாடசாலைச் சீருடை முழுவதும் இரத்தம் தோய்ந்த நிலையில் வகுப்பறையில் இருந்து வெளியே வந்த அவரைப் பொலிஸார் விசாரணை செய்தனர்.

தன்னை மன்னிக்குமாறு தேம்பி அழுத சிறுமி கொலைக்கான காரணத்தை வெளியிடவில்லை. கொல்லப்பட்ட சிறுமியின் தந்தை,மகளோடும் மகனோடும் தனித்து வாழ்ந்து வந்தார். அவர் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளார். ஆறாம் தரம் படிக்கும் சிறுமி தனது சக மாணவியைக் கொலை செய்வது என்பது ஜப்பானியர்களால் ஜீரணிக்க முடியாத விடயமாகவுள்ளது. (யே)



கடந்த செவ்வாய்க்கிழமை ஈக்குவடோரின் குயிற்றோ நகரில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில், உலக அழகியாக வெற்றி வாகை சூடிய 20 வயது நிரம்பிய அவுஸ்திரேலியாவின் ஜெனிபர் ஹோக்கின்ஸைப் படத்தில் காண்கிறீர்கள்.

## நேபாள மன்னரால்
# பதவி நீக்கப்பட்டவர் மீண்டும் பிரதமரானார்

(காத்மண்டு)

மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிப் பீடமேறிய ஷேர் பகதூர் டியூபா,இரண்டு வருடங்களுக்கு முன்னர் நேபாள மன்னர் கஜேந்திராவால் பதவி நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து நேபாளத்தில் பெரும் குழப்பநிலை தோன்றியது.மீண்டும் மன்னர் கஜேந்திரா அவரைப் பிரதமராக நியமித்துள்ளார்.



சர்வதேச ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், உடனடியாக நாட்டில் தேர்தல் ஒன்றை நடத்துவதே தமது நோக்கம் என்று டியூபா தெரிவித்துள்ளார். 2002 ஒக்டோபரில் இவர் பதவியிலிருந்த மன்னரால் வெளியேற்றப்பட்டமைக்குத் தேர்தலைப் பின்போட்டமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

2002இல் தேர்தலை நடத்தாமல் விட்டது தனது தவறு என்று ஒப்புக் கொண்ட டியூபா மாவோ கெரில்லாக்களுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்தார். இரண்டு வருடங்களுக்கு முன்னால் மாவோ கெரில்லாக்களின் தாக்குதலில் இவர் காயங்களுடன் உயிர் தப்பியதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த எட்டு வருட காலமாக மாவோ கெரில்லாக்கள் மன்னராட்சியை ஒழிக்கக் கோரி நடத்திவரும் தாக்குதலில் சுமார் 10 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். (யே)

## இந்தோனேஷியாவிலிருந்து
# சிட்னி ஜோன்ஸை வெளியேற்ற உத்தரவு

(ஜகார்த்தா)



இந்தோனேஷியாவில் இயங்கி வரும் சர்வதேச முரணபாடுகளை இனங்காணும் சிந்தனை மையத்தின் தலைவரான சிட்னி ஜோன்ஸை உடனடியாக வெளியேறுமாறு அந்நாடு அறிவித்திருக்கிறது.


குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்ட போதும் இந்தோனேஷிய உளவுத் துறைத் தலைவின் கட்டளையின்பேரிலேயே தனக்கும் தனது சகா ஒருவருக்கும் இந்த உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையாளர்களுக்கு ஜோன்ஸ் தெரிவித்தார்.

ஏஸ் மற்றும் பப்புவா மாகாணங்களில் இந்தோனேஷிய அரசாங்கம் நடத்தும் கொடுரங்கள் குறித்தும்,அல்கெய்டா இயக்கத்துடன் இந்தோனேஷிய இஸ்லாமியக் குழுவான ஜெமா இஸ்லாமியாவுக்கு இருக்கும் தொடர்புகள் குறித்தும் மிகக் காரசாரமான முறையில் ஜோன்ஸ் எழுதி வந்தார்.இதுவே அவரது வெளியேற்றத்திற்குப் பிரதான காரணி என்று கருதப்படுகிறது.

உளவுத்துறைத் தலைவர் ஹெந்றோப் பிரியானோ இதுபற்றிக் கூறுகையில் சிட்னி ஜோன்சின் நடவடிக்கைகள் இந்தோனேஷியாவின் பெயருக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் குற்றம்சாட்டினார். (யே)

# சிங்கப்பூர் அரசு பயணிகள் பாதுகாப்பை பலப்படுத்துகிறது

(சிங்கப்பூர்)




விமானநிலையங்கள், பொதுஇடங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் சிங்கப்பூர் அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளது.


பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தில் அமெரிக்காவின் நெருங்கிய சகாவாக விளங்கும் சிங்கப்பூர் மேற்குலக நாடுகளின் பிரதான அரசியல பொருளாதார மையமாகவும் விளங்குகிறது. இதன் காரணமாக இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தலில் இந்நாடு பிரதான இடம் வகிக்கிறது. ஆயுதமில்லாத சீருடை தரித்த பொலிஸார் யாரையும் , எங்கும் விசாரிக்கவும், அவர்களது உடமைகளைச் சோதனையிடவும், நீதிபதியின் ஆணையின்றிக் கைது செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை பொதுமக்கள் பாதுகாப்பை முன்னிட்டு மேற்கொள்ளப்படுகின்றபோதும் த்னி நபர்களின் தனிப்பட்ட உரிமைகளை அவமதிப்பதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (யே)

WORLD NEWS
உலக தரிசனம்

# ஜோன் கெரியை எச்சரிக்கும் அமெரிக்கப் போர் வீரர்கள்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் எதிர்வரும் நவம்பரில் போட்டியிடவுள்ள ஜோன்கெரியை வியட்நாம் யுத்தகாலத்தில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம் தொடர்பில் அமெரிக்கப் போர் வீரர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.



1969 ஆம் ஆண்டு வியட்நாமில் அமெரிக்க இராணுவத்தில் லெப்டினன்டாகப் பணியாற்றிய செனட்டர் கெரி, அவ்வாண்டில் ஜனவரி 22ல் தமது மோட்டார் படகு அணியுடன் எடுத்துக் கொண்ட ஒரு புகைப்படத்தை இப்போது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்துகிறார். இது முறைகேடானது என்றும் பிழையான விதத்தில் தாங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் இப்படத்தில் இருக்கும் ஏனையோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

வியட்நாமில் அமெரிக்காவின் தலையீடு தவறானது என்று 1971ல் கெரி கடுமையாக விமர்சித்தார்.இதனால் சக இராணுவ வீரர்களின் எதிர்ப்பை அவர் அப்போது சம்பாதிக்க நேர்ந்தது.இன்னும் 10 நாட்களில் சம்பந்தப்பட்ட புகைப்படம் விளம்பரத்தில் இருந்து நீக்கப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக முன்னாள் இராணுவ வீரர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (யே)

# இத்தாலியப் பணயக் கைதிகள் அல் – ஜஸீரா தொலைக்காட்சியில்

(பக்தாத்)

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஈராக்கின் ஆயுததாரிகளால் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட நான்கு இத்தாலியரில் மூவர் நல்ல நிலையில் இருப்பதாக அல்-ஜஸீரா தொலைக்காட்சி ஒளிநாடா ஒன்றின் மூலம் அறிவித்தது.



தாங்கள் நலமாக இருப்பதாக இத்தாலிய மக்களுக்கும், உறவினர்களுக்கும், பிரதமருக்கும், பரிசுத்த பாப்பரசருக்கும் அறிவிப்பதாக சல்வதோர் ஸ்ரெபியா என்று தன்னை அடையாளப்படுத்திய இத்தாலியர் தெரிவித்தார்.தங்களைப் பிடித்து வைத்திருப்பவர்கள் தம்மை நன்றாகக் கவனித்துக் கொள்வதாக கூறிய அம் மூவரும் சவரம் செய்யப்படாத முகங்களுடன் காணப்பட்டனர்.

இவர்களில் நான்காவது நபர் பிடிக்கப்பட்ட சில தினங்களுக்குள்ளாகவே சிரச்சேதம் செய்யப்பட்டார். அவரைப் பற்றிய எந்தத் தகவலையும் இவர்கள் வெளியிடவில்லை.ஈராக்கில் இத்தாலியின் கொள்கைகள் கைவிடப்படாவிட்டால் இம்மூவரும். கொலை செய்யப்படுவர் என்று பணயம் வைத்திருப்போர் அறிவித்துள்ளனர். (யே)

# 2004/2005 க்கான பிறீமியர் லீக் கால்பந்து போட்டிகள் ஆரம்பம்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் பிறீமியர் லீக் கால்ந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன. இவ் வருடத்திற்கான முதலாவது போட்டியில் க்ரறி விளையாட்டுக்கழகமும் றினோன் விளையாட்டுக் கழகமும் சாலிக்கா மைதானத்தில் இன்று மோதுகின்றன.



கடந்த வருடம் நடைபெற்ற பிறீமியர் லீக் கால்பந்தாட்ட போட்டியின் முதல் சுற்றில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்திருந்தது. எனினும் இரண்டாவது சுற்றில் விக்ரறி அணியினர் றினோன் அணியினரை 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டிருந்தனர்.

பிறீமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளின் இரண்டாவது போட்டியில் களுத்துறை புளூஸ்ரார் விளையாட்டுக் கழகமும், பொலிஸ் விளையாட்டுக்கழகமும் களுத்துறையில் மோதுகின்றன. கடந்த ஆண்டு பிறீமியர் லீக் போட்டியில் முதல் சுற்றில் களுத்துறை புளூஸ்ரார் அணியினர் பொலிஸ் அணியினரை 1:0என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டிருந்ததுடன், இரண்டாவது சுற்றில் இவ்விரு அணிகளுக்குமிடையிலான போட்டி கோல் எதுவும் பெறாத லையில் சமநிலையில் நிறைவடைந்திருந்தது.

இதேவேளை, இம்முறை முதலாம் பிரிவு போட்டிகளில் வெற்றி பெற்று பிறீமியர் லீக் கால்பந்தாட் போட்டிகளுககு தகுதிபெற்றுள்ள வென்னப்புவ அணியும், கண்டியணியும் இன்று கண்டியில் மோத ள்ளன. கடந்த ஆண்டு நடைபெற்றிருந்த முதலாம் பிரிவு கால்பந்தாட்டப் போட்டிகளில் இவ்விரு ணிகளும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று இம்முறை பிறீமியர் லீக் போட்டிகளுக்குத் தரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (யே-68)

# கால்பந்து தெரிவு போட்டிகளில் ஆர்ஜென்டீனா முன்னணியில்

உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இதுவரை நடாத்தப்பட்டுள்ள தகுதிகாண பாட்டிகளில் ஆர்ஜென்டீனா முன்னணி வகிக்கின்றது. தென்அமெரிக்க வலயத்தைச் சேர்ந்த நாடுகளுக்கிடையிலான தகுதிகாண் கால்பந்தாட்டப் போட்டிகளிலேயே ஆர்ஜென்டீனா முன்னணி வகிக்கின்றது. தென்அமெரிக்க லையத்திற்கான தகுதிகாண கால்பந்தாட்டப் போட்டிகள கடந்த வருடம் முதல் நடைபெற்று வருகின்றன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள தகுதிகாண் போட்டிகளில் ஆர்ஜெனடீனா 11புள்ளிகளைப் பெற்று ன்நிலையில் விளங்குகின்றது. தலா 10புள்ளிகளைப் பெற்றுள்ள சிலீ இரண்டாம் இடததையும், பராகுவே ன்றாம் இடத்தையும் வகிக்கின்றன. எனினும் பிரேசில் அணி நான்காவது இடத்திலே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடைசியாக நடைபெற்ற இவ் தகுதிகாண் போட்டிகளில் உருகுவே மற்றும் பெரு அணிகளுக்கிடையிலான பாட்டியில் 3:1என்ற கோல் கணக்கில் பெரு அணி வெற்றி பெற்றுள்ளது. வெனிசுலா மற்றும் சிலி அணிகளுக்கிடையிலான ற்றுமொரு போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் சிலீ அணி வெற்றி பெற்றுள்ளது. பொலிவியாவிற்கும், ராகுவேக்கு மிடையிலான போட்டியில் 2:1என்ற கோல கணக்கில் பொலிவியா அணி வெற்றி பெற்றுருந்தது. தாடர்ந்தும் இவ் தகுதிகாண் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

(யே-68)


# யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற பெண்கள் விபரங்கள்வருமாறு:

| நிகழ்ச்சி | பெயர் | பால் | முடிவு | பிரதேச செயலகம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 400m தடை தாண்டல் | செ.தயாளினி | பெண் | 1ம் இடம் | பருத்தித்துறை | 1:18.00வி |
| 400m தடை தாண்டல் | செ.சுமாஜினி | பெண் | 2ம் இடம் | உடுவில் | |
| 400m தடை தாண்டல் | க.மதுரா | பெண் | 3ம் இடம் | நல்லூர் | |
| முப்பாய்ச்சல் | தி.வாசுகி | பெண் | 1ம் இடம் | யாழ்ப்பாணம் | 9:10மீ |
| முப்பாய்ச்சல் | செ.சுமாஜினி | பெண் | 2ம் இடம் | உடுவில் | |
| உயரம் பாய்தல் | அ.அனற்றிராகினி | பெண் | 1ம் இடம் | சண்டிலிப்பாய் | 1.33மீ |
| உயரம் பாய்தல் | செ.சுமாஜினி | பெண் | 2ம் இடம் | உடுவில் | |
| உயரம் பாய்தல் | வி.டயித்தா | பெண் | 3ம் இடம் | யாழ்ப்பாணம் | |
| 400 m | வ.சயந்தினி | பெண் | 1ம் இடம் | வேலணை | 1:15.3 மீ |
| 400m | இ.பிரமாலட்சுமி | பெண் | 2ம் இடம் | நெடுந்தீவு | |
| 400m | வீ.மயூரி | பெண் | 3ம் இடம் | சாவகச்சேரி | |
| 800 m | சி.சிவரஞ்சினி | பெண் | 1ம் இடம் | சண்டிலிப்பாய் | 2:45.15வி |
| 800 m | இ.அனுசியா | பெண் | 2ம் இடம் | சாவகச்சேரி | |
| 800 m | அ.ரூபிகா | பெண் | 3ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| 10000 m | ந.மேஷி | பெண் | 1ம்இடம் | சண்டிலிப்பாய் | 45:42.00வி |
| 10000 m | எஸ்.சிவரஞ்சினி | பெண் | 2ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| 10000 m | என்.சுமதி | பெண் | 3ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| 100mts | ந.ஸ்ரீவித்தியா | பெண் | 1ம்இடம் | சங்கானை | 14.2வி |
| 100mts | அ.அனற்றிராகினி | பெண் | 2ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| 100 mts | வீ.மயூரி | பெண் | 3ம் இடம் | சாவகச்சேரி | |
| குண்டெறிதல் | ப.கார்த்திகா | பெண் | 1ம் இடம் | தெல்லிப்பழை | 8.36மீ |
| குண்டெறிதல் | ம.சுபாஜினி | பெண் | 2ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| குண்டெறிதல | க.சேதுப்பிரியா | பெண் | 3ம் இடம் | தெல்லிப்பழை | |
| 5000m | சிசிவரஞ்சினி | பெண் | 1ம் இடம் | சண்டிலிப்பாய் | 21:46.20வி |
| 5000m | ந.மேசி | பெண் | 2ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| 5000m | என்.சுமதி | பெண் | 3ம் இடம் | சண்டிலிப்பாய் | |
| நீளம் பாய்தல் | தி.வாசுகி | பெண் | 1ம் இடம் | யாழ்ப்பாணம் | 4.26வி |
| நீளம் பாய்தல் | அ.துஷாந்தினி | பெண் | 2ம் இடம் | வேலணை | |
| நீளம் பாய்தல் | வ.சயந்தினி | பெண் | 3ம் இடம | வேலணை | (யே-68) |

# இவ்வாண்டின் இறுதிவரை அபிஜித்ஹாலேக்குத் தடை


இந்திய கிரிக்கெற் வீரரான அபிஜித்ஹாலேக்கு இவ்வருட இறுதி வரை கிரிக்கெற் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள் ளது. இந்திய தேசிய கிரிக்கெற் அணியில் இடம்பெறும் பொருட்டு தேசிய கிரிக்கெற் தெரிவுக்குழுவினருக்கு லஞ்சம் வழங்க முயற் சித்தமைக்காகவே இவருக்கு இந்த தடைவிதிக்கப்பட்டுள் ளது.



இந்திய தேசிய கிரிககெற் தொாவாளர்களான கிரொன் முரோ, பிரணாவ்ராய் ஆகியோருக்கு லஞ்சம் வழங்கப் ஹாலே முயன்றுள்ளார். இந்திய தேசிய கிரிக்கெற் அணியில் தான் இடம்பெற வேண்டுமென்பதற்காக கிரிக்கெற் தேர்வாளர்களை தான் தொடர்பு கொண்டது, தொடர்பான குற்றச் சாட்டை அபிஜித்ஹாலே ஒப்புக் கொண்டுள்ளார். எனினும் இவர்களுக்கு லஞ்சம் வழங்குவதற்கு முற்பட்டது தொடர்பாக தன்மீது சுமத்தப்பட்டுளள குற்றச்சாட்டுக்களை ஹாலே மறுத்துள்ளார்.

30வயதான அபிஜித்ஹாலே மகாராஷ்டிர மாநில கிரிக்கெற் அணியின முன்னணித் துடுப்பாட்ட வீரராவார். 2003ம் ஆண்டு நடை பெற்ற பங்களாதேஷ் அணிககெதிரான ஒரேயொரு ஒருநாள் சர்வதேச கிரிக் கெற் போட்டியில் இந்திய் தேசிய அணிக்காக இவர் விளையாடியிருககிறன்றார்.

மேலும், ஹாலே உள்ளூர் கிரிக்கெற் போட்டிகளில் 58:00என்ற துடுப்பாட்ட ஓட்ட சராசரியை கொணட சிறந்த வீரராகவும் திகழ்கின் றார். (யே-68)



லேக்கர்ஸ் அணியுடனான அமெரிக்க தேசிய கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு பிஸ்டன் அணியினர் தெரிவாகியுள்ளனர். 14 வருடங்களில் இறுதிப் போட்டிக்கு இவ்வணி தெரிவாகியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ்.மாவட்ட எல்லே அணி இன்று அமபாறை பயணம்

யாழ்.மாவட்ட எல்லே (ஆண்கள்) அணியினர் வடக்கு-கிழக்கு மாகாண மட்ட எல்லே போட்களில் கலந்து கொள்வதற்காகவே இன்று காலை அம்பாறைக்குப் பயணமாகின்றனர். நாளையுமு, நாளை மறுதினமும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தெய்யத்த கண்டியவில் நடைபெறவுள்ள எல்லே விளையாட்டு போட்டிகளில் கலந்துகொளவதற்காக இவர்கள் இன்று அங்கு பயணமாகின்றனர்.

இம்முறை யாழ்.மாவட்ட மட்ட எல்லே போட்டிகளில் வெற்றிபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு அணி வீரர்கள் உள்ளடங்கலாக இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்பிரதேச செயலா் பிரிவு அணி வீரர்கள் மற்றும் கோப்பாய் பிரதேசசெயலா் பிரிவு அணி வீரர்களும் இம்முறை யாழ்.மாவட்ட எல்லே அணியில் இடம்பெற்றுள்ளனர்.

சென்ற ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண மட்ட எல்லே போட்டியின் முதலாவது சுற்றில் வெற்றி பெற்றிருந்த யாழ்.மாவட்ட எல்லே அணியினர், அரையிறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணியிடம் தோல்வியைத் தழுவியிருந்தனர். மேலும் சென்ற ஆண்டுக்கான இம்மாகாண மட்ட எல்லே போட்டிகளும் அம்பாறையின் தெயயத்த கண்டியவிலேயே நடைபெற்றிருந்தன.

(யே-68)



செல்ஷியா உதைபந்தாட்டக் கழகத்தின் புதிய முகாமையாளர் மோரின்ஹோ (இடது), பழைய முகாமையாளர் றனீரி (வலது) இவர் பிரான்சின் வலன்சியா கழகத்தால் வரவேற்கப்பட்டுள்ளார்.

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு - குறள்

வலம்புரி

# இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்

இலங்கை-இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான ஆயத்தங்களில் இரு நாடுகளும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உள்ள நகல் யோசனைகளை இலங்கை அரசிடம் இந்தியா கையளித்துள்ளது.

பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இடம் பெறவேண்டிய சரத்துக்களை இலங்கை ஏற்கனவே இந்தியாவிடம் கையளித்திருந்தது. அதற்குப் பதிலீடாகவே இந்தியா தனது தரப்பிலான சரத்துக்களை இலங்கையிடம் கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

எதுவாயினும் இலங்கை-இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவது உறுதியாகிவிட்டது. இலங்கை- இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் இரு நாட்டிற்கும் அவசியமானதாகக் காணப்படுவதை அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இரு நாடுகளும் காட்டுகின்ற அவசரத்தில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை இந்தியா செய்து கொள்ள வேண்டியதற்கான காரணமும், இந்தியாவுடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான காரணமும் வெவ்வேறுபட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கானதென இருநாடுகளும் கூறிக் கொண்டாலும் அடிப்படை நோக்கம் ஒன்றாகவே இருப்பதை அரசியல் ஆய்வாளர்கள் கண்டுகொள்வர்,

அதாவது, இலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்த வரை தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற எண்ணமே கிடையாது. இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிலைநிறுத்துவதே அவர்களின் நோக்கமாகும்.

இந் நோக்கத்திற்கு தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டம் தடைக்கல்லாக அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் தியாகம் அவர்களின் ஆட்பலம், ஆயுதபலம் இவற்றினை எதிர் கொள்ள முடியாத இலங்கைப் படை இதன் காரணமாக நாடு இரண்டாகப் பிரிந்து போய்விடுமோ என்ற பயம்.

இதனால் அண்டை நாடான இந்தியாவைத் தனது பாதுகாப்பிற்கு உத்தரவாதமாக்கிக் கொள்ள இலங்கை விரும்புகின்றது.

ஏற்கனவே , ராஜீவ்- ஜே.ஆர். ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசுக்கு சாதகமான நிகழ்வுகள் நடந்தேறின. இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் வந்ததன் மூலம். இலங்கைப் படையினரின் உயிர்கள் பாதுகாக்கப்பட்டன. இந்தியப் படை விடுதலைப் புலிகளுடன் மோதிக் கொண்டு தானும் அழிந்து ஈழத் தமிழர்களையும் அழித்தது.

அதேவேளை, இந்தியாவுக்கும்- விடுதலப் புலிகளுக்குமிடையிலான நல்லுறவு கெட்டுப் போய் பகைமை உண்டானது. இது ராஜிவ்-ஜேஆர் ஒப்பந்தத்தினால் இலங்கைக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றியாகும்.

இந்தியாவையும்- விடுதலைப் புலிகளையும் பகைக்க வைத்ததன் மூலம் தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டது. இவ்வாறு செய்த ஜே.ஆர். எனது அரசியல் அனுபவமும், ராஜிவ் காந்தியின் வயதும் ஒன்றெனக் கூறிய திமிர்க்கதையை எவரும் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள்.

அன்று ராஜீவ்- ஜே.ஆர் ஒப்பந்தத்தால் நினைத்ததைச் சாதித்த இலங்கை இப்போது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்வதன் மூலம் தனது திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள விரும்புகின்றது.

இது இலங்கையின் நிலைப்பாடு, மறுபுறத்தில் இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதில் இந்தியாவுக்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் ஒன்று விடுதலைப் புலிகள் மீது அந்நாட்டிற்கு இயல்பாக இருக்கக் கூடிய பயம். அதாவது, விடுதலைப் புலிகள் இலங்கையில் தனி நாட்டை அமைத்துவிடுவார்களாயின் அதனால், இந்தியாவின் இறையாண்மைக்குப் பங்கமாகிவிடும்.

விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தமிழ் நாடு தனி நாடாகிவிடும் என்ற பயம் இந்தியாவை ஆட்டிப் படைக்க இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதே ஒரே வழியென இந்தியா கருதிக் கொண்டது. இதுவொரு காரணம்.

மற்றையது இலங்கையில் நிலவும் இனவிவகாரத்தை சாட்டாக வைத்துக் கொண்டு. அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகள் இலங்கைக்குள் ஊடுருவிவிடும் என்ற பயம் இதன் காரணமாகவும் இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள இந்தியாவிரும்புகிறது.

# உடன் பேச்சை ஆரம்பிக்கத் தவறின் நிதி உதவிகள் கைமாறிச் செல்லும்

## உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு எச்சரிக்கை

(பெல்ஜியம்)

புலிகளுடனான சமாதான முயற்சிகள் தொடரப்படாவிட்டால் 4 ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை அரசு இழக்க நேரிடும் என உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் ஆகியன இலங்கைக்கு உதவி வழங்குவது குறித்த மீளாய்வுக் கூட்டத்ததை நேற்றுமுன்தினம் பெல்ஜியத்தில் நடத்திய வேளையிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இலஙகையின் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்த சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான உதவு தொகையாக உதவி வழங்கும் நாடுகளால் 4 ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் தற்பொழுது ஸ்தம்பிதமடைந்துள்ளதனால் இந்நிதி உதவியை இலங்கைக்கு வழங்க முடியாது எனவும் மீளவும் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால் மாததிரமே இந்நிதி உதவிகள் வழங்கப்படும் எனவும் இவ் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமை அறிவித்துள்ளது.

அதனுடன்,சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பித்து இந்நிதி உதவிகளை அரசு பெறத் தவறும் பட்சத்தில் இந்நிதிஉதவி வேறுநாடுகளுக்கு வழங்கப்படும் எனவும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமை எச்சரித்துள்ளது.

இலங்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டாலேயே சர்வதேச அனுகூலங்களை அவர் பெற்றுக்கொள்ள முடியும் என வலியுறுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4,61)

# மட்டு. படுகொலைகள் பற்றி விரிவான விசாரணை நடத்தும் தகுதி எமக்கு இல்லை

## கைவிரிக்கிறது கண்காணிப்புக்குழு

(லண்டன்)

ஊடகவியாலாளர் நடேசன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் கருத்துச் சுதந்திரத்தை பறிப்பது மட்டுமன்றி, சமாதனத்திற்கு கூட அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் துணைத்தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டன்.

ஊடகவியாலாளர் நடேசன் கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு படையினரும் கண்காணிப்புக் குழுவினரும் காரணமாக உள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளமை குறித்து லண்டன பி.பி.சி தமிழ்ச்சேவைக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக் கூறுகையில், ஊடகவியாலாளர் நடடேசனின் கொலைச் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் இதுவரை எமக்கு எந்தவித முறைப்பாடும தெரிவிக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலங்களாக படுகொலைச சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஊடாகவியலாளர்கள் கொல்லப்பட்டு வருகின்றதை நாம் அவதானித்து வருகின்றோம்.

ஆனால் இநதக் கொலைச் சம்பவங்களுக்கு யார் காரணம்? என்பதைத்தான் கண்டறிய முடியாமலிருக்கின்றது.

இது தொடர்பாக நாம் விசாரணைகளை நடத்தி வருகின்றோம ஆனால் விரிவான புலனாய்வு விசாரணையை மேற்கொள்ளும் சக்தி ,தகுதி எமக்கு இல்லை. எனவே இத்தகைய விசாரணைகளை புலிகளும் பொலிஸாருமே மேற்கொண்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றார். (62,10)

# ஸ்ரீ. சு. க. அமைப்பாளர்களின் துயவை நாடும் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

சகல தேர்தல் தொகுதிகளுக்குமான ஸ்ரீ.சு.க. அமைப்பாளர்களை கடந்த திங்களன்று சந்தித்த ஜனாதிபதி ஒவ்வொரு பிரதேச அபிவிருத்திகளுக்கும் அமைச்சர்களுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில்,இடம்பெற்ற இச் சந்திப்பின் போது இதனை தெரிவித்த ஜனாதிபதி எதிர்வரும் மாகாணசபை தேர்தல்களில் நடந்துகொள்ளும் முறை பற்றி விளக்கினார். இதன் போது தேர்தல் பிரசாரங்களில் ஜே.வி.பியினரின் பிரசாரமுறையையே தாமும்கடைப்பிடிப்பது கடினமாக உள்ளதென பல அமைப்பாளர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

அதாவது ஜே.வி.பி.யினர் தமது மூன்று தேர்தல் போட்டியாளர்களையும் ஒன்றாகப் பதிவு செய்துவிட்டு விருப்புவாக்குகளையும் ஒன்றாகப் பெறும்படியாகவே பிரசாரம் செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக ஸ்ரீ.சு.க. தேர்வாளர்கள் விருப்புவாக்குகளைப் பெறுவது கடினமாகவுள்ளது எனத் தெரிவித்தனர். இதனால ஜே.வி.பியினருக்கே மாகாணசபைத் தேர்தல்களில அதிகளவான பெரும்பானமை கிடைக்க வாய்ப்புள்ளதாக அவர்கள் கூறினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி போதியளவு ஸ்ரீ.சு.க. அமைப்பாளர்கள் இன்மையினாலேயே இப்பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே இதனை நிவிர்த்தி செய்ய வேண்டும் என்றார். (உ)

ௐ தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

மந்திரங்கள், மலர்கள், உருவங்கள் ,தீபாராதனைகள் போன்ற சடங்குகள் எல்லாமே மனத்தை ஒரு குறிப்பிட்ட நிலைக்குக் கொண்டு வருகின்றன. ஆனால் அந்த நிலை எப்போதும ஆன்மாவிலேயே உள்ளது. வேறு எங்கும் இல்லை. எல்லோரும் இதைச்செய்து கொண்டிருக்கிறாகள் ஆனால் தெரியாமல் செய்கிறார்கள். நீங்கள் தெரிந்து செய்யுங்கள் இதுதான் தியானத்தின் சக்தி.

சுவாமி விவேகானந்தர்

# வடமராட்சி மீனவர்களுக்கு 10 வெளியிணைப்பு இயந்திரங்கள்

(திருநெல்வேலி)

வடமராட்சி கடற்றொழிலாளர்களின் தொழிலை மேம்படுத்தும் நோக்கில் நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கப் பணிமனையில் வைத்து 10 வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தும்பளை கிழக்கு, சுப்பர் மடம,தொண்டைமானாறு மற்றும் ஆதிசக்தி ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே நேற்றுமுன்தினம் இந்த வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் யு. என். டி.பி. நிறுவன அதிகாரி திருமதி சிவபாதம், கடற்றொழில் நீர்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கே. தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மிக விரைவில் அடுத்த கட்டமாகவும் வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-43)

# ஒப்பந்தத்தை உறுதிசெய்ய குழூ அமைக்க இணக்கம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கடசிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் குழுவொன்றை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலையடுத்து இது தொடர்பாக இணக்கம் ஏற்பட்டதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இதுகுறித்த பேச்சுவார்த்தையில், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கட்சியின் பொதுச செயலாளர் மைத்திரிபால சிறிசேன, மங்[illegible] [illegible]மரவீர, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர். சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால, ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் கே. பாலபெட்ட பெண்டி ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையின ஆரம்பத்தில கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# நாயன்மார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் 63 நாயன்மார் குருபூசைத்தின வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை காலை திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருகர் திருநீலநக்கா ஆகிய நாயன்மார்களின் குருபூசை இடம் பெறவுள்ளது.

கல்லூரியில் உள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் இடம் பெறும விசேட பூசையைத் தொடர்ந்து கு.பாலசண்முகனின் சிறப்புச் சொற்பொழிவ இடம்பெறவுள்ளது. (உ)



நேற்றைய தினம் நெல்லியடியில் ஊடகவியலாளர் ஜி.நடேசனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் அஞ்சலி உரை நிகழ்த்துவதைப் படங்களில் காணலாம்.

# மரண தண்டனைக் கைதிகளின் மேன்முறையீட்டு மனுவிசாரணைக்கு

(கொழும்பு)

பிந்துனு வெவ படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கூறப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரிப்பதற்காக 5 நீதியரசர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவினால் நியமிக்கப்பட்ட இந்தக்குழுவிற்கு உயர் நீதிமன்ற நீதிபதி ஜே.என்.சில்வா தலைமை தாங்குகின்றர்

மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொளளப்படவுள்ளது.

2000 ஆம் ஆண்டு ஒக்ரொபர் மாதம் 27ஆம் திகதி பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துனு வெவ முகமுறக்குள் புகுந்து 27 பேரை படுகொலை செய்ததுடன் 14 பேரை படுகாயமடையச்செய்த 41 பேருக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு இப் படுகொலைச் சம்பவத்திற்கு முக்கிய சூத்திரதாரியாக இருந்த 5 பேருக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்நிலையில் மரணதண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்ட 5 பேரும் தமக்கு அளித்த மரணதண்டனைத் தீர்ப்பை நீக்கி ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே.

(உ- 60,10)

## ஊடகவியலாளர்..

பொதுமக்கள் எனப்பலரும மலர் அஞ்சலி செலுத்தினர்,தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம இடம்பெற்றது.

கிழக்கிலங்கைப் பத்திரிக்கைச் சங்க உபதலைவர் தவராசா, பாராளுமனற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.கஜேந்திரன், சுரேஸ்பிரேமச்சந்திரன் மற்றும் விடுதலைப் புலிகளின யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, வடஇலங்கை பத்திரிகையாளர் சங்க செயற்குழு உறுப்பினர் ஆர்.தயாபரன், யாழ்.ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன், கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவன் கெனடி, வீரகேசரி பொதுமுகாமையாளர் கந்தசாமி, இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் சங்கத் தலைவர் சுசந்த தேசப்பிரிய உட்பட பத்திரிக்கையளர்கள், அரசியல் வாதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். (ச-52)

# 'கபோட்'' நிறுவனப் பிரதிநிதி யாழ். நிலை குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டனில் உள்ள கிறிஸ்தவ அமைப்பான 'கபோட்' நிறுவனப் பிரதிநிதி மேரி லூகல் நேற்றையதினம் யாழ். 'மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்து குடாநாட்டின் இன்றைய நிலைவரம் குறித்துக் க்லந்துரையாடியுள்ளார்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இணையத் தலைவர் ஸ்ரீ சக்திவேல் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மக்களின் பிரச்சினைகள் தேவைகள் குறித்தும் மேரி லூகல் கேட்டறிந்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு தான் யாழ்ப்பாணம் வந்தபோது இருந்த நிலைமைக்கும் தற்போதுள்ள நிலமைக்கும் இடையிலான வேறுபாடுகள், மக்களின் வாழ்க்கை முறைகள், நிவாரணத்தின் அவசியம், புனர்வாழ்வு புனரமைப்பு நிலைமைகள் குறித்தும் இவர் இணையப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

'ஊற்று' நிறுவனப் பிரதிநிதியான எஸ்.விக்னேஸ்வரன் குடாநாட்டு மக்கள் தொடர்பில் விளக்கமளிக்கையில்.

இங்கு வாழ்கின்ற மக்கள்ள 4 விதமாக வகைப்படுத்தலாம்.

முகாமில் வசிப்போர் (22 ஆயிரம் குடும்பங்கள்), நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுய்ளோர் (20 ஆயிரம் குடும்பங்கள்), புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் மீளக் குடியமர்ந்தோர் (49 ஆயிரம் குடும்பங்கள்), புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் மீளக் குடியமர்ந்தோர் (95 ஆயிரம் குடும்பங்கள்) என்ற வகைப்படுத்தலில் இவர்கள் அடங்குகின்றனர்.

இந்த நிலையில் இந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது முறையற்றது

இதைவிட இங்குள்ள வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிக்கை விடுவதிலேயே அக்கறை காட்டுகின்றன.

உதாரணமாக தலா 15 ஆயிரம் ரூபா வீட்டுத் திட்டத்தை அமுல்படுத்த வீடொன்றிற்கு 50 ஆயிரம் ரூபாவை நிர்வாகச் செயற்பாடுகளுக்கு செலவழிக்கும் நிலையே இங்கு காணப்படுகின்றது எனச்சுட்டிக்காட்டினார். (உ-16)

## ஜனாதிபதியின்.

முயற்சிகள் பற்றிய இந்திய அரசின் நிலைப்பாடு என்பன குறித்து கதிர்காமர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினார்.

இதேவேளை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கதிர்காமர் பிரதமர் மன் மோகன் சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு ஆலோசகர் டிக்சித், வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அகியோரைச் சந்தித்தப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது (த-121)

## கேள்வி அறிவித்தல்

### மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரினால் பின்வரும் வேலைகளிற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| குருநகர் தொடர் மாடிக் கட்டிட மலசல கூடம், குளி, தாங்கிகள், நீர்வழி விநியோகம் ஆகியவைகளின் திருத்த வேலைகள் - Stage-II | M7 | Rs 35000/- | Rs 750/- |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால்(ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்கரார் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்பு. செய்யக் கூடிய் வைப்புத் தொகை ரூபா35000/= மும் மீளளிப்பு செய்ய முடியாத தொகை ரூபா 750/-ஐயும் செலுத்தி 24.06.2004 ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை விண்ணப்பப்படிவத்தினையும் BOQ வையும் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத் தொகுதிகளை(இணைப்பிரதிகளில்)யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் "குருநகர் மாடிவீட்டு'' கட்டிடங்களிற்குச் செய்ய வேண்டிய அத்தியாவசியத் திருத்த வேலைகள் Stage II என எழுதப்படல் வேண்டும்.
8. பெறியிடப்பட்ட கேள்விகள் "தலைவர் யாழ்.மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 25.06.2004ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்குமுன்பாக எங்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். இதன்பின்னர் கேள்விகள் 25.06.2004ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமூகமளிக்க முடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்

செ.பத்மநாதன்,
தலைவர்,
மாவட்டக் கேள்விச் சபை,
யாழ்ப்பாணம்.

மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
03.06.2004

C-211)

## கொலையாளிகளை....

பிரவீன் றஸ்முஸின் முன்னிலையில் இருசாராருக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் இராணுவத்தின் சார்பில் 23வது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி கேணல் லக்ஸிறி அமரதுங்கா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரும்- தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் நகர அரசியல் துறைப் பொறுப்பாளா சேனாதிராஜா, பட்டிருப்புக் கோட்ட பொறுப்பாளர் செல்வம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் கடந்த திங்கட்கிழமை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஜி.நடேசனின் கொலைபற்றியும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக பேராசிரியர் தம்பையாவின் கொலை குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்ப:கின்றது.

இச்சந்திப்பின் முடிவில், தமிழிழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில்.

தற்போது நடைபெற்று வருகின்ற படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இராணுவத்தினரின் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-121)

# 122 வருடங்களின் பின் விண்வெளியில் அபூர்வம்

(கொழும்பு)

122 வருடங்களுக்கு பின்னர் விண்வெளியில் நிகழும் அபூர்வ நிகழ்வைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு இலங்கையர்களுக்கும் கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, வெள்ளிக் கிரகம் சூரியனுக்கும் - பூமிக்கும் இடையில் பயணிக்கும் போது கிரகணம் ஏற்படவுள்ளது இது 6 மணித்தியாலங்கள் வரை நீடிக்கவுள்ளது.

இதேவேளை மு.ப 11.00 மணி 14 நிமிடம் தொடக்கம் பி.ப 5 மணி 23 நிமிடம் வரையான காலப்பகுதியில் நடைபெறும் இவ் விண்வெளி விந்தை சூரியனை ஒரு கரும்புள்ளி ஊடறுத்துச் செல்லும் காட்சியைப் போன்று தென்படும் என விண்வெளி மன்றத்தின் பிரதான விஞ்ஞானி கலாநிதி சந்தன ஜெயரத்தின தெரிவித்துள்ளார். (60,10)

## ஜனாதிபதி....

கைத்தொழில் கிழக்கு மாகாண கல்வி நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சத்திட்ட பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கிழக்கு மாகாணத்திற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுஎன்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(உ60-10)

நாளை..
அறவழி வெள்ளி விழா
கைதடி நுணாவிலில்
அறவழிப் போராட்டக் குழு
(8545)

இப்பக்கிரிகை வலம்பரி அன். கோ ஸ்காபனக்காரால் இல.15 வெள்ளாங்கெரு. யாம்ப்பாணம் என்னும் மகவரியிவள்ள அவர்களகு அச்சகக்கில் 04.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டகு.